Ω23:38'2'1192
JP
N32
170851
170851

# திருப்பாதிரிப்புலியூர்

## ஸ்தலமான்மியம்



…விலாச புத்தகசாலை
…பாதிரிப்புலியூர்

98 pages
Q 23:38 ·2192 5 P
N52
120851

A

P. R. C. Series No. 50

JUL 1932

சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
ஸ்ரீ பார்வதீஸ்தந்யபாயிநே நம:

# திருப்பாதிரிப்புலியூர் ஸ்தலமான்மியம்

—:o:—

இது

சென்னை "விவேகபாநு" ஆசிரியரா யிருந்தவரும்,
"எட்டிகுடி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தோத்திரமஞ்சரி,"
"திருக்கழுக்குன்றம் ஸ்ரீ திரிபுரசுந்தரியம்மன்
தியான சிந்தாமணி" முதலிய
நூலாசிரியருமான,
தமிழ் நாவலர்,

சு. கு. கோவிந்தசாமிப் பிள்ளை

அவர்களெழுதியது.

---

பிரசுரித்தது
"ஸ்ரீ வாணி" விலாச புத்தகசாலை,
திருப்பாதிரிப்புலியூர்.

---

[விலை கிளேஸ் அணா 8.
உரிமைப்பதிவாயது] 1932 „ ரப் „ 6.

B

170851

சென்னை-600 008

577
294.535

4 - JUL 1932



உ

குகமயம்

# உரிமையுரை

---

விற்பனக் குரவ னாகி விளங்குமென் னுளத்தே யாங்கூர்
கற்பன வனைத்துங் காட்டிக் கழறுமா கலைக ளாற்றஞ்
சொற்பதஞ் சுடர வெண்ணாட் சுந்தர வுரையி கந்த
னற்பதம் பணிந்து மிந்நூல் கவின்றன னுரிமை நன்றே.

சு. கு. கோ.

உ

முருகவேள் துணை.

# அவையடக்கம்

விளங்குமதி தனக்குநிகர் மினிர்நுளை விளங்காத
விதமே போலக்
கிளக்கமறக் கற்றோர்முன் கல்லாவென் கலையுமொரு
கலையாக் காணன்
வளங்குன்ற மெனுமுறையை யுணர்ந்தேனு முணர்ந்தவுரை
வழுத்தாக் குற்றம்
உளங்கொண்ட வுணர்வனவே புரைத்தனனெ னுரெழித்
துவப்பவர் மேலோர்.

சு. கு. கோ.



உ

முருகவேள் துணை.

# உரைமுகம்

சிவனடி யொன்றே சிந்தையிற் சேர்க்குந்
தவகல மிக்கத் தண்டமிழ்ச் சிலர்காள்!

புண்ணியம் பழுத்துப் புனிதமிக் கோங்கும் பாரதகண்டத்தே பதிந்து விளங்கும் பாக்கிய மெய்திய மக்களெவர்களும் வழிபட்டுய்வா னுவந்த வலசிலை யண்ணல் ஆனந்தத் தாண்டவ அற்புத லீலா விநோதனு யிசைந்து மிளிரும் இறைமை சான்ற க்ஷேத்திரங்கள் பலவற்றுள்ளே திருப்பாதிரிப்புலியூர் என்பதும் ஒன்றாம்.

இச்சிவத்தலம் தென்னுற்காடு ஜில்லாவிற் பிரதானப் பட்டினமாகப் பிறங்கப் பெறுவதாம். இத்தலத்தைச் *சிந்து வேணியன் சித்தரூப கொண்டு சிருட்டித்ததால் "சித்தபுரி" யென்றும், உலகெலாந் தந்த வோங்கற் செல்வியாம் உமாதேவி கன்னியாயமர்ந்து கழறருந் தவமாற்றிக் கருணாகரன் கடாக்ஷம் பெற்றால் "கன்னிபுரம்" என்றும், வியாக்ரபாதர் விதிமுறையி பூசித்து வியன்பெற்றதால் "வியாக்ரபுரி யல்லது புலிசை" யென்றும், சைவசமயக் குரவருளொருவராய நாவர சன்னுந் தாண்டவ வேந்தர் † நரங்கவாய்ப் பட்டுத் தன்றுங்காலைத் தளர்வொழிய கரையேற்றியதால் "தயாபுரி யல்லது உத்தாரபுரம்" என்றும் இசை மணங்கெழுமு மின்றமிழா ரியம்புவர்.

இவ்வரிய பெருமை நெய்திய க்ஷேத்திரத்தி லிசைந்திலங்கு மிறைவனைப் "பாலீஸ்வரர், உத்தாரேஸ்வரர், சித்தேஸ்வரர், தோன்றாத்துணைவர்" எனவும், உமாதேவியாம் அன்னையை "அருந்தவநாயகியம்மை, பெரியநாயகியம்மை, தோகையம்பிகையம்மை" எனவு மிசைத் திறைஞ்சுவர்.

* சிந்து-கங்கை. † நரகம்-கடல்.

இத்தலத்தின்கண் றழுங்குந் தலவிருக்ஷமாகச் சாற்றும் பாதிரி விருக்ஷத்தில் பனிமதிவேணிப் பகவன் பதித்த கடாக்ஷத்தால் முடங்குகால் பெற்ற முனிவரிருவர் தாமெய்திய முரணுஞ் சாபந் தணந்துந் தழங்கிய பேறும், மணிவாசகப் பெருமானும் வாதவூரடிகள் திருவுளங்களித்து இறைவனும் பாடலீஸ்வரனைப் பணிந்திறைஞ்ச வழிதந்து *உத்தர நோக்கிச் செல்லும் கெடிலநதியி னுயர்வும், பினாகினி யென்னுந் தென்பெண்ணை நதியின் சீரும், சிவகர தீர்த்தம், பிரம தீர்த்தம் (சமுத்திரம்) முதலிய விசேட தீர்த்தங்களுஞ் செறிந்து மிளிரும் க்ஷேத்திர வேந்தாந் திருப்பாதிரிப்புலியூர் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தே வழிபட்டுப் பேறடைந்தோர் வரையில ராயினும். 'உமாதேவியார், உதக நாயகி (கங்கை), ஒள்ளழற்கடவுள் (அக்கினி), மங்கணமாதவன் (மங்கணவிருடி), உபமன்யு" முதலியோ ருமாபதியை வழிபட்டு ° ஊருத பேறும் ஒள்ளிய பதவியு முறைந்தன ரென்னு முண்மை இந்நூற்கண் தெற்றெனத் தெரிக்கக் காணலாம்.

இவ்வரிய க்ஷேத்திர வரலாறுக ளெல்லாவற்றையும் செந்தமிழ் வல்லார் சித்த முவப்பச் செவ்வே யாய்ந்து யாப்பணி யிலங்கத் திருவாவடுதுறை யாதீனம், இலக்கணம் சிவ ஸ்ரீ சிதம்பரநாத முனிவரவர்களாற் றமிழ்ச் செய்யுள் வடிவிற் பாடியுள்ளதைப் பேரிய ஆதாரமாகக் கொண்டே இதனைச் சுருங்கிமுறையிற் கூடாச்சொல்லுவான் றுகளி லென்னுளத்தே, துலங்கும் மாமறை நடிப்பொருட் கூறிய வல்லி மணாளன் வழங்கிய வண்டமிழ்நல்லிய முறையி லிசைத்தனன்.

இசைத்த விதனை யிருந்த மூளர் எள்ளா தேற்றே யெனைநனி யாசி யீந்து விவைபோலெவ்வையு மியற்ற வூக்க மளிப்ப ரென்பது திணமே.

| | |
|---|---|
| சௌகார்பேட்டை, சென்னை. 11—5—1932. | இவ்விதம், ங்களன்பினுழியன், கு. கோவிந்தசாமி. |

* உத்தரம்-வடக்கு, ° ஊருத குற்பபாத.

உ

முருகவேள் துணை.

# சிறப்புப்பாயிரம்

இது,

சென்னை, இதோபதேச மன்றத்தின் காரியதரிசி,

அகரந்துளி

பிரமஸ்ரீ. இராகவாச்சாரியார்

அவர்களியற்றியது

அறுசீர்க் கழிநெடிலடி யாசிய விருத்தம்

பங்கயப் புத்தே ளன்னப் பறவையாய்ப் பறந்துங் காணாப்
புங்கவன் சென்னி வாழ்க்கைப் பொருந்திஎழ் கங்கை யாடன்
றங்கரற் துடியின் றோன்றற் றுகளினற் சிமுன் கண்ணாற்
சங்கரன் வேட்குஞ் செம்மைத் தண்டமிழ்த்தரிகா வீசன், 1.

சத்தியந் திறம்பாச் சீலன் றமனிய வொழுக மிக்கோ
னுத்தியங் குன்றா வாறுடை வுரைமணித் தமஞ் செய்வோன்
சித்தியம் மெட்டே மொன்றீஇச் சிறக்கவந்த திருவா ருள்ளோ
னித்தியன் குமர வேளின் கிலவுசீர் திகழ்த நேயன், 2.

என்றெடுத் தியம்பற் கன்றோ னிருநில நவப்ப வென்னே
நன்றெடுத் துரைந்தா னென்னின் காண் முகமா கோர்த்தித்
தன்றுபா டலக்கா மன்னுஉந் துகடவிப் புலிசை மேன்மை
யொன்றிடக் கொற்று னியார்க்கு முறைகோன்கோ விந்த சாமிஇ, 3.

ஆதலால் வாழி யின்னோ னுற்றிய விரல் வாழிப்
பூதலம் வாழி யின்னோன் பொருந்துகண்போர் வாழீஇ
யேதமிற் சைவம் வாழி யிலங்குகண் ணித்தன் வாழீஇ
யோதவாம் பாதி ரியூ ருமையான் வா வாழி. 4.

இது,
பரங்கிப்பேட்டை, தமிழ்ப்பண்டிதர்,
ஸ்ரீமான். ப. அ. முத்துத்தாண்டவராயப்பிள்ளை
அவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

செங்கால வெள்ளனங் காணாத சடர்வேணிச்
செம்மல் மேய
கொங்காரு மலர்த்தடலைத் திருப்பா திரிப்புலியூர்க்
குலவு சீர்த்தி
பங்காரு முமையுளா னின்னுரையிற் பொறித்தெனக்குப்
பண்பி னீக,
நங்கேமா னியானெனிற் பொன்னிநாட் டிலுப்பூர்
நாவ லேனுய், 1.

உலகமுழு தும்பவுங் குமாசா மிப்பிள்ளைக்
குயர்ந்த தோர்ற
லலகில்பெருங் கலையாய்ந்தான் வேளாளர் குலதீப
னாள்பா லேயன்
கலகமிலாப் புலவரலாஞ் சொலற்குரியா னடியார்பாற்
கலந்த தூயன்
திலககவி முத்தமிழ்தர் கோவிந்த சாமியெனுஞ்
சிரி யோனே. 2.

---

இது,
சென்னை, சித்தாந்தப் பிரகாச சபைத் தலைவர்,
வித்துவான்
பாரிப்பாக்கம், ஸ்ரீமான். கண்ணப்ப முதலியார்
அவர்களியற்றியது.

அறுசீராசிரிய விருத்தம்

தாண்டகச் சதுரரை தண்கடன் மிதப்பி னேறு
மாண்டகு பதியின் மேவி யாவரு மகிழத் தந்தா
னீண்டிய தமிழ்வ ளத்தன் எழிலினி துணரு மாண்பு
பூண்டகோ விந்த சாமி புலவனும் பெயர்பெற் றேனே.

---



இது,
சென்னை, இதோபதேச மன்றத் தலைவர்
புனா, தமிழ்ப்பூஷணம்,
ஸ்ரீமான் - வாசுதேவராவ் கேய்க்குவார்
அவர்களியற்றியது.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வரைமகடன் றிருமேனி வயங்கக் கொண்டோன் வார்சடையின்
வதிந்திலங்கும் வனஞ்சா லன்னைத்
திரைமகடன் குலத்தானோன் றிருகா ளோர்மைத் தெரிக்கவுறுந்
தீந்தமிழ்சேர் திருவார் வரக்கிஇ
யுரைமகடன் னருள்வேட்போ னுருள்செங் கைய னென்றபெயர்
கோவிந்த சாமி யம்மா!
தரைமகடன் முகத்திருப்பா திரிப்பு லியூர் தருதியெலாத்
தகத்தந்தான் றாணி யோர்க்கே.

---

இது,
சென்னை, இதோபதேச மன்றத்தி னுபதலைவர்,
திருக்குடந்தை, சைவபூஷணம்,
ஸ்ரீமான். தி. சு. சுவாமிநாத செட்டியார்
அவர்களியற்றியது.

பண் - கட்டபாடை

பிறையார்சடை முடியே னுமைப் பிறங்குந் திருமேனி
மிறையார்நுதன் விழியாரிறை யெனையாட் குமரேசன்
னுறையார்திரு னளினம்புய னனியா ளிருசாணம்
முறையார்மன முறையோர்குல முதற்கோ விந்தசாமி, 1.

தலமொன்றுயர் மிகவேந்தியக் தாவா னலந்தாங்கு
திலமொன்றுயர் செம்பாடலம் நிலவும் புலியூரைப்
பொலமென்றுயர் தமிழாற்புவிப் போலிவா நறவளித்தா
னலமொன்றுயர் முறையும்மவ னவிலும் புவிவாழி. 2.

இது,

இந்நூலாசிரியரிடத்து

அன்புதழைந்த அன்பர்களி லொருவராய,

செங்கற்பட்டு ஜில்லா, காவாத்தூர்,

திருவாளர், கா. தா. கெஜராஜனவர்கள்

கூறியது.

அறுசீரடியாசிரிய விருத்தம்

எந்தனுக் குற்ற வன்ப னென்னிரு நயத்தி லாராக்
கந்தனைத் துதித்தே வாழுங் கருத்தொரு மித்த சீலன்
அந்தரக் கவிக ளேசொற் றூயகோ விந்த சாமித்
தந்தனன் பழமை யாய்ந்து தழைந்துசீர் புலிசை மாண்பே.

---

இது,

உடுமலை சரபகவி மாணவர், சென்னை.

ஸ்ரீமான் ச. சு. சங்கரலிங்கக் கவிராயர்

அவர்கள் பாடியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

பாரார்ந்த செந்தமிழின் மணம்படரும் பாமடந்தைப்
பண்புற்றோங்குஞ்
சீரார்ந்த தென்றிருப்பா திரிப்புலியூர் தலமகிமைச்
சிறக்கத் தந்தான்
ஏரார்ந்த புலவர்மகிழ் சங்கமெலாம் புகழ்ந்தேத்துஞ்
சதுரன் வீசும்
போரார்ந்த கோவிந்த சாமிநா வலனென்னும்
பெரியோன் மாதோ.

---



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்



# திருப்பாதிரிப்புலியூர்-தேவாரம்

## திருஞான சம்பந்த சுவாமிக ளருளிச்செய்தது

---

### பண்-செவ்வழி

முன்னநின்றமுடக்கால்முயற்கருள்செய்துநீன்
புன்னைநின்றுகமழ்பாதிரிப்புலியூருளான்
றன்னைநின்றுவணங்குந்தனைத்தவமில்லிகள்
பின்னைநின்றபிணியாக்கையைப்பெறுவார்களே. (1)

கொள்ளிக்கப்பருவாயபேய்கள்குழைந்தாடவே
முள்ளிலவம்முதுகாட்டுறையும்முதல்வனிடம்
புள்ளினங்கள்பயிலும்பாதிரிப்புலியூர்தனை
யுள்ளநம்மேல்வினையாயினவொழியுங்களே. (2)

மருளினல்லார்வழிபாடுசெய்யும்மழுவாளர்மேற்
பொருளினல்லார்பயின்பாதிரிப்புலியூருளான்
வெருளின்மானின்பிணைநோக்கல்செய்துவெறிசெய்தபின்
னருளியாகத்திடைவைத்ததுவும்மழகாகவே. (3)

போதினாலும்புகையாலுமுய்த்தேயடியார்கடாம்
போதினாலேவழிபாடுசெய்யப்புலியூர்தனு
ளாதினாலுமவலம்மிலாதவடிகண்மறை
போதினாளும்பிச்சையேற்றுண்டுணப்பாலதே. (4)

ஆகநல்லாரமுதாக்கவுண்டானழந்லை
நாகநல்லார்பரவந்நயந்தங்கரையார்த்தவன்
யோகநல்லார்பயிலும்பாதிரிப்புலியூர்தனுட்
பாகநல்லாளொடுநின்றவெம்பரமேட்டியே. (5)

மதியமொய்த்தகதிர்போலொளிம்மணற்கானல்வாய்ப்
புதியமுத்தந்திகழ்பாதிரிப்புலியூரெனும்
பதியில்வைக்கப்படுமெந்தைதன்பழந்தொண்டர்கள்
குதியுங்கொள்வர்விதியுஞ்செய்வர்குழகாகவே. (6)

கொங்கரவப்படுவண்டறைகுளிர்கானல்வாய்ச்
சங்கரவப்பறையின்னொலியவைசார்ந்தெழப்
பொங்கரவம்முயர்பாதிரிப்புலியூர்தனு
ளங்கரவம்மரையிலசைத்தானையடைமினே. (7)

வீக்கமெழுமிலங்கைக்கிறைவிலங்கல்லிடை
யூக்கமொழிந்தலறவ்விரலிறையூன்றினான்
பூக்கமழும்புனற்பாதிரிப்புலியூர்தனை
நோக்கமெலிந்தணுகாவினைநணுகுங்களே. (8)

அன்னந்தாவுமணியார்பொழின்மணியார்புன்னை
பொன்னந்தாதுசொரிபாதிரிப்புலியூர்தனுண்
முன்னந்தாவியடிமூன்றளந்தவனான்முகன்
றன்னந்தாளுற்றுணராததோர்தவநீதியே. (9)

உரிந்தகூறையுருவத்தொடுதெருவத்திடைத்
திரிந்துதின்னுஞ்சிறுநோன்பரும்பெருந்தேரரு
மெரிந்துசொன்னவ்வுரைகொள்ளாதேயெடுத்தேத்துமின்
பரிந்துவெண்ணீற்றண்ணல்பாதிரிப்புலியூரையே. (10)



அந்தணல்லாரகன்காழியுண்ஞானசம்
பந்தனல்லார்பயில்பாதிரிப்புலியூர்தனுட்
சந்தமாலைத்தமிழ்பத்திவைதரித்தார்கள்மேல்
வந்துதீயவ்வடையாமையால்வினைமாயுமே. (11)

---

## திருநாவுக்கரசு சுவாமிகளருளிச்செய்தது

---

### திருவிருத்தம்

ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத்துகந்தான்மனத்துள்ளிருக்க
என்றானிமையவர்க்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத்துணையாயிருந்தனன்றன்னடியோங்களுக்கே. (1)

பற்றாய்நினைந்திடப்போதுநெஞ்சேயிந்தப்பாரைமுற்றுஞ்
சுற்றாயலைகடன்மூடினுங்கண்டேன்புகனமக்கு
உற்றானுமையவட்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்
முற்றாமுளைமதிக்கண்ணியினான்றன்மொய்கழலே. (2)

விடையான்விரும்பியென்னுள்ளத்திருந்தானினிநமக்கிங்
கடையாவவலமருவினைசாராநமனையஞ்சோம்
புடையார்கமலத்தயன்போல்பவர்பாதிரிப்புலியூ
ருடையானடியாரடியடியோங்கட்கரியதுண்டே. (3)

மாயமெலாமுற்றவிட்டிருணீங்கமலைமகட்கே
நேயநிலாவவிருந்தானவன்றிருவடிக்கே
தேயமெலாநின்றிறைஞ்சுந்திருப்பாதிரிப்புலியூர்
மேயநல்லான்மலர்ப்பாதமென்சிந்தையுணின்றனவே. (4)

வைத்தபொருணமக்காமென்றுசொல்லிமனத்தடைத்துச்
சித்தமொருக்கிச்சிவாயநமவென்றிருக்கினல்லால்
மொய்த்தகதிர்மதிபோல்வாரவர்பாதிரிப்புலியூர்
அத்தனருள்பெறலாமோவறிவிலாப்பேதைநெஞ்சே. (5)

கருவாய்க்கிடந்துன்கழலேநினையுங்கருத்துடையேன்
உருவாய்த்தெரிந்துன்றனாமம்பயின்றேனுனதருளாற்
றிருவாய்ப்பொலியச்சிவாயநமவென்றுநீறணிந்தேன்
றருவாய்சிவகதிநீபாதிரிப்புலியூரானே. (6)

எண்ணாதமரரிக்கப்பரவையுணஞ்சையுண்டாய்
திண்ணாரசுரர்திரிபுரந்தீயெழச்செற்றவனே
பண்ணார்ந்தமைந்தபொருள்கள்பயில்பாதிரிப்புலியூர்க்
கண்ணார்நுதலாய்கழனங்கருத்திலுடையனவே. (7)

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்ததீவண்ணனே. ( )

மண்பாதலம்புக்குமால்கடன்மூடிமற்றேழுலகும்
விண்பாறிசைகெட்டிருசுடர்வீழினுமஞ்சனெஞ்சே
திண்பாணமக்கொன்றுகண்டோந்திருப்பாதிரிப்புலியூர்க்
கண்பாவுநெற்றிக்கடவுட்சுடரான்கழலிணையே. (9)

திருந்தாவமணர்தந்நெறிப்பட்டுத்திகைத்துமுத்தி
தருந்தாளிணைக்கேசரணம்புகுந்தேன்வரையெடுத்த
பொருந்தாவரக்கனுடனெரித்தாய்பாதிரிப்புலியூர்
இருந்தாயடியேனினிப்பிறவாமல்வந்தேன்றுகொள்ளே. (10)

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ பார்வதீஸ்ய பதயே நம:

திருப்பாதிரிப்புலியூர்

# ஸ்தல மான்மியம்

## வழிபடு கடவுள் வணக்கம்

### எழுசீர் சந்த விருத்தம்

பாணி யானனன் பரமன் பார்வதி பதும
வாலயப் பண்ணவன்
காணி யாண்டவன் கரும மாற்றியங் கதிர
யிற்கரக் கந்தனம்
வாணி யாரிய ஞகு மின்னவர் வனச
னேர்சர னென்னுளேப்
பேணி யாற்றிடும் புலிசை மான்மியம் பிழைப
டாதவர் பிறங்கவே.

---

## நான்முகம்

### 1. நைமிசாரணியச் சருக்கம்

செய்ய பங்கயப் பொகுட்டி லேயுறை செம்பொற்
ருனிலை மாதவர்
வெய்ய வல்வினை வீய்த்து மேன்மைசெய் வியன்றி
கழ்ந்திடும் வித்தகத்
துய்ய நற்றல னென்று கூறுநீஇத் துகளின்
மாதவமி யாமுற
மெய்ய னேயென வவன்றன் றுண்மலர் விதியி
லேத்திட விதியுமே, (1)

---

☞ இந்நூற்கண்வரும் செய்யுட்களெல்லாம் என்னாலியற்றப் பெற்றவை —கு. த. கோ.

புரமெ ரித்தவன் புனித பாதமுட் பொருந்தி
யேத்திய வன்மனு
முரணொ ழிந்தகன் றவி ஞானனி மொழிந்து
தர்ப்பமொன் றினையுரு
வான சிக்கரு வாழி யாமென வாக்கி
விட்டன னவைபடிப்
பரம்ப திந்தகன் னைமி சவ்வனம் பரம
னுதன்வக் திற்றனன், (2)

ஏற்ற சூதனை நற்ற வத்தின ரொன்றி
பூசனை யாற்றியம்
பெற்ற வீர்ந்திட வின்று வற்றனம் பெருமை
நின்வர வானலங்
கற்ற றிந்தநுங் கவின்ச வைமொழிக் கந்த
னீசரு ளுகர
னுற்ற மேன்மையை யோதி னீரின மோத
வேண்டுமென் றேத்தினர். (3)

உலகெலாம் போற்றும் உமைமகிழொளியாய்; ஓதற்கரிய வேதமென்னுங் குடிலையம் பொருளாய்; மக்களெவர்களும் வழிபட்டுய்வான் விரும்பி மிளிரும் மாமறைப் பொருளாய்; எக்காலத்தும் அழிவிலா முழுமுதற் கடவுளாய்; "சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம்" என்னும் பஞ்சகிருத்தியங்களை யியங்குவிக்கும் அனாதிமல முத்த சித்துருவாய், ஆனந்தத் தாண்டவ சொரூபியாய் எங்கும் நிறைந்திலங்கும் கைலை வாசனும் பரசிவத்தின் கட்டளையைப் போற்றும் திசைமுகத்



தேவனாற் சிருட்டிக்கப்பட்டதும் * சப்த சாகரங்களாற் சூழப் பெற்றதுமானப் புண்ணிய பூமியெனப் புகழ்ந்தோதப் பெறும் பரதகண்டத்தில் (பரதனாலாளப்பட்டமையின் பரதகண்டம் எனக்காரணப் பெயர் கழறவாயிற்று) கங்கையணி சங்கரனை மங்களாகன் மனத்திருத்தி மௌனநிலையில் மருவி மன்னும் தவச்சிரேட்டர்கள் பிரசவங் குடியனைப் பிரமனைநாடிப் பேசருந்தவமியற்றிப் பணிந்து நாங்கள் வதிந்து மிளிர்தற்குரிய வரும்பதி யாதென்று வேண்டி வினவினர்.

அங்ஙனம், வினவிய முனிவர்கட்கு வேதநாயகன் தருப்பை யொன்றினைத் தன் தமனியக் கரத்தாலெடுத்து †நேமியாக்கி யபிமந்திரித்து அதனைப் பூமியின்மீது விசையாய் உருட்டி விட்டு, "ஓ! முனிவர்காள்! இந்நேமி எங்குபோய்த் தங்குகின்றதோ அவண் நீங்கள் அமைதியுடன் வீற்றிருந்துத் தவம்புரிவீர்கள்" எனப் பகர்ந்தான்.

நான்முகன் நவின்றது கேட்ட நற்றவச் சிரேட்டர்கள் யாவரும் பூமிசைச் செல்லும் நேமியைப் பின்றொடர்ந்து சென்றார்கள். அவ்வாகனனால் விடப்பட்ட அழகிய நேமி யநேக காடுமலைகளையுங் கடந்து, மகாமகிமை பொருந்திய கங்கைமாநதியின் வடபாலடைந்து அசைவற்று நின்றது. அங்ஙனம், முனிவர்கள் மலர்மிசைக் கடவுள் வழுத்தியவாறே தங்கள் தவத்திற்குகந்த தானமிதுவென நிச்சயித் தாங்கு அருந்தவ மாற்ற வமரலாயினர்.

---

* சப்தசாகரங்களாவன.—"1. நீர், 2. பால். 3. தயிர். 4. நெய். 5. சுரு. 6. கருப்பஞ் சாறு. 7. உப்பு" என்பனவாம்.

† நேமி—சக்கரம்.

அவ்வமயம் இருந்தவச் சிரேட்டர்கள் தவமகிமைப் பார்ப்பதற்காக வேதகுருவாம் வியாசமுனிவரின் மாணாக்கரும், பதினெண் புராணங்களைப் பகருந் தேற்றமிக்குடையாரும், மகா மகிமைதங்கிய விபூதியும், உருத்திராக்க மாலைகளையும் விதிப்படித் தரித்து விளங்கும் மேனியராயும், பஞ்ச பாதகம் பாறியோடிட வோட்டும் பஞ்சாட்சர மகா மந்திரத்தையே இடை விடாது செபிக்கு நேர்மையுடையவராயுமுள்ள சூதமாமுனிவர் ஆங்கு வருவாராயினர்.

புராணம் வல்லப் புனித சூதர் வரவைக்கண்ட மாதவ விருடிகள் தாயைக்கண்ட தனயனேபோலும், * மஞ்சுகண்ட மயிலேபோலும், † அருக்கனைக்கண்ட ‡ அம்புயமே போலும், மாரிகண்ட பயிரேபோலும், தனத்தைக்கண்ட தரித்திரனே போலும், $ ஆவைக்கண்டக் கன்றேபோலும், ** தேசிகனைக் கண்ட சீடனே போலும், சிவனைக்கண்ட தவனே போலும் ஆனந்த சாகரத்தி லாழ்ந்தினவர்களாய் முனிவரெவர்களும் சூதர் முன்னடைந்து, அன்புட னுபசரித்து, அர்க்கியபாத்திய ஆசமனங்களை முறையே அஞ்சலிபத்தர்களாய் வணங்கியவருக்குத் தக்க ஆசனமளித்து அதன் மீது அமர்ந்திருக்கச் செய்தனர்.

பின்னர் முனிவரெவர்களுஞ் சூதமாமுனிவரை நோக்கி, "எங்களிருந்தவப்பேறே இங்கு வந்த தொப்ப மீண்டெழுந்தருளியப் பேரருட் கடலாம் பெருந்தவப் பெரியாய்! தாங்கள் தலை கூர்ந்து திருவாய் மலர்ந்தருளிய புராணப்

* மஞ்சு-மேகம். † அருக்கன்-சூரியன். ‡ அம்புயம்-தாமரை. $ ஆவு-பசு. ** தேசிகன்-குரு.



பொலிவால் அறிவு, ஞானம், பத்தி யுண்டாதலால், பிரம, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளது சொரூபந்திகழப் பெற்றவர் தாங்களே என்பது முக்காலும் உண்மை! உண்மையே!! ஆதலால், தாங்களிது போழ்து இங்கெழுந்தருளப் பெற்றதால் நாங்கள் யாவரும் சகல பேறுகளையும் பெற்றுப் பெருமையுடையவர்களானோம்" என்று சௌனகாதி முனிவர்கள் சாற்றித் தாழ்ந்தனர்.

பத்தியிற் பதிந்து பணிந்த மாதவச் சிரேட்டர்களைச் சூதமாமுனிவர் தண்ணருணோக்கா லினிது நோக்கி, "மாசறு வீசன் மலரடி யொன்றே மறவாதிறைஞ்சும் மாதவச் சிலர்காள்! உலகெலாம் போற்றும் உமையொளிர் பாகன் தன்னிடத்தேத் தாரா வன்புடைய உபய சம்புவாந் திருநந்தி தேவருக்குத் திருவாய் மலர்ந்தருளியவையான பதினெண் புராணங்களையும் தன்பா லன்பு தழைந்தச் சற்சீடனாஞ் சனற்குமாரனுக்கு நந்தியம் பெருமான் நன்முறை வழுவா துபதேசித்தார்.

அவ்விதம் நந்தியம் பெருமானுபதேசிக்கப் பெற்றவற்றை யுணர்ந்த சனற்குமாரர் தன் மாணவரான வேதவியாசற்குத் திருவருட் சார்ந்து திருவாய் மலர்ந்தருளினர். அவ்விதம் திருவாய் மலர்ந்தருளிய புராணங்களவற்றையும் எவர்களுக்கு முபயோகமாம் பொருட்டு அடியேனுக்கு அன்பு தழைந்து அருட்செயப் பெற்றேன்.

அருமறை யனைத்தையும் அரியநன் முறையில் ஆக்கியளித்த வேதவியாசர் விளங்க விளம்பிய பதினெண்புராணங்களுட் சிறந்த பத்தி, புத்தி, முத்திகளைப் போதிக்கும்படி

யாய சைவபுராணம் பத்துள், உருத்திர சங்கிதையில், உத்திர காண்டத்திலுரைத்துள்ள ஓர் உத்தம க்ஷேத்திரத்தின் சிறப்பைப்பற்றி யீண்டுரைப்பாம். அமைதியுடன் கேட்பீர்களாக" வென்று சூதமா முனிவர் சொல்லிச் சொல்லுவாராயினர்.

"ஊறென்பது உள்ளமொன்று வொள்ளிய உள்ள சிரேட்டர்காள்! அந்த சிவத்தலத்தில் சங்கர னங்கத்திற் பாதிபெற்ற மங்களநாயகியாம் மறைமுடி யன்னை, உதக நாயகி, ஒள்ளழற்பகவன், மங்கண மாதவன், உபமன்யு முதலானவர்கள் அருந்தவமியற்றி யடைதற்கரிய பெரும் பேறடைந்தனர். தவிரவும், அந்த க்ஷேத்திரத்தில் கற்பக விருக்ஷமே யொப்ப சாபமகற்றுஞ் சத்திவாய்ந்ததாய் விளங்கும் பாதிரிவிருக்ஷத்தின் மகிமையை என் குருநாதன் வியாச பகவானருளியவாறுச் சொல்கின்றேன், கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள்!" என்று சூத புராணிகர் நைமிசாரணிய வாசிகளுக்குத் திருவாய் மலர்ந் தருளுவ தாயினர்.

"ஓ! நீதிதவறாச் சன்மார்க்கத்திலேயும், ஞானமார்க்கத்திலேயு மன்றி வேறொன்றிலும் மனதைச் செலுத்தா உத்தம மாதவர்காள்! அப்புண்ணிய பதியிற் சிறந்து வோங்கும் அதிபாவ நாசனியான கங்கை தானேற்றுள்ளப் பாவங்களைப் போக்கியதும், சகல கல்யாண குணங்கள் யாவும் நிறைந்த பரசிவத்தினாற் றோற்றுவிக்கப் பட்டதுமான சிவகர தீர்த்தம், திக்பாலக தீர்த்தம், தெக்ஷிணபிநாகினி தீர்த்தம், கெடில தீர்த்தம், பாலோடைத் தீர்த்தம் முதலிய விசேடத் தீர்த்தங்களுஞ் செறிந்து மிளிர்வதால், புண்ணிய மிகுந்த வத்தீர்த்தங்களில் மாசற்ற மனத்துடன் ஸ்நானஞ்செய்து, நித்திய கருமானுட்டானங்களை முடித்துக்கொண்டு, சர்வலோக சரண்யனான சர்வேசுரனை முறைப்படிப் பணிவார்களாயின், எத்தகைய பாவங்களும் மாறி, யடைதற்கரியதாயுள்ள இகபர சுகபோக பாக்கியங்களை யெய்துவார்களென்பதி லையமில்லை.



அத்தகைய வரும் பெருஞ் சிறப்புவாய்ந்த க்ஷேத்திரத்திலூர்வன முதலிய எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களிற் பிறந்த பல பிறவிகளுக்குள் பகுத்தறியுந் தன்மை யமைந்த மனிதர்களுட், சிறந்த வேதத்தாற் பிரித்து கூறப்பட்ட பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரராகிய நான்கு வருணத்தாருக்கும், அவ்வவ் வருணத்கேற்ப வகுத்துள்ள * பிரமசரியம், கிரகஸ்தம், வானபிரஸ்தம், சன்னியாசம் ஆகிய நான்காச்சிரமத்தாருக்கும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு படிகளாக

---

*பிரமசரியம்:—கல்வியோ டொழுக்கம் கற்றுத் தெளிதற்காய காலம் என்ப.

கிரகஸ்தம்:—மனைவியோ டொன்றிய வாழ்க்கையை இனிது நடாத்தி, "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கும், இல்வாழ்வா னென்பான் றுணை" என்றபடி யொழுக வென்ப.

வானபிரஸ்தம்:—இல்லறமகற்றி மனைவியுடன் வனம்புக்கி, அரிய நோன்புகளை யவனுள்ள அருந்தவர் விதித்த முறையிலாற்றி யுறைதலா மென்ப.

சன்னியாசம்:—எல்லாப் பற்றுக்களையும் ஒருங்கே யொழித்து என்று மொளிரும் எல்லாம் வல்ல முழுமுதற்கடவுள் ஒருவனையன்றி யெவையுமின்றுமென்னும் இலங்குணத்துட னிலங்கலே யாமென்ப.

என்றன் றுரைத்த விளியகன் வாக்கியம்
இன்றென் னுளக்கனி லேற்றன னென்றலை
மன்றெளிர் மன்னனை வழிமுறை பூசித்து
என்றென் பணியிழை யேகுவ தென்றான், (4)

என்றுமே பணிந்த தேவிக் கிறைவனுங் கைலை யண்ண
லொன்றுநின் னிடப்பா லுற்று ரொன்புயங் கண்க ளோடே
நன்றுறத் தடிக்கு மாங்கே யக்தரீ தவஞ்செய் போதிப்
பொன்றுநின் பாவமி யாவும் பொருக்தவண் வருவோமென்றான். (5)

இந்து சேகர னிணையடி மறவா திறைஞ்சு மிருடிச் சிரேட்டர்களே! "ஆல், அரசு, அத்தி" முதலியன சிறந்து தழைந்த மரங்களும், "மா, பலா, விளா, கதலி, சம்பு" முதலிய கனிவர்க்கங்களைத் தரும் விருக்ஷங்களும், "தென்னை, பனை, கோங்கு" முதலிய வோங்கி வளர்ந்த மரங்களும், "செண்பகம், கொன்றை, அசோகு, மல்லிகை, முல்லை, இருவாட்சி" முதலிய பூவின விருக்ஷங்களுஞ் செறிந்து விளங்கும் பேரழகாலும், விபூதியின் பிரகாசத்தினாலும், "இருக்கு, யசுர், சாமம், அதர்வண" மாதிய வேதங்களை யோதுதலா லெழும் பேரிய முழக்கத்தினாலுஞ் சிறந்து விளங்கும் ஸ்ரீ கைலையங்கிரியின் சிகரத்திலே பொன்னெனப் பொலியும் புனித மண்டபத்தில், நவரத்தின கசிதமான சிம்மாசனத்தின்கண் உலகம் பயந்த வோங்கற் செல்வியாம் ஸ்ரீ ப்ரமேஸ்வரியும், பத்தி வலையிற்படும் பரம கருணா நிதியாம் ஸ்ரீ பரமேஸ்வரனும் வீற்றிருக்க, திருநந்தி தேவர் பணிப்படி பிரம, விஷ்ணுக்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும், சப்தரிஷிகளொடு நாற்பத்தெண்ணாயிர



மிருடிச் சிரேட்டர்களும், "கின்னரர், கெருடர், காந்தர்வர், சித்தர், வித்தியாதரர், யக்ஷர்" முதலானவர்களும் விதிமுறையில் வியன்பெற ஒருவர்பின் னொருவராயும், கூட்டங் கூட்டமாயும், "பிருங்கி, நாரதர், தும்புரு, பதஞ்சலி, வியாக்ரபாதர், புஷ்பதந்தர், சவுனகன், தேவலன், அட்டவக்கிரன், உரோமசன், பார்க்கவன், சாபாலி, காசிபன், மாதேசன்" முதலான விருடிச் சிலர்களுந் தனித்தனியே தண்மதிசூடிய தடவரைச் சிலையரனைப் பணிந்து தங்கள் தங்கள் குறைகளை முறையிட்டுக் குறையொழிய வரம் பெற்றுச் சிறப்புடனேகும் போது, செஞ்சடையிற் கங்கையணி சங்கரன் தரணிமாக்களை யுய்விப்பான் வேண்டியோர் திருவிளையாட்டயர்வான்; திரும்பிச் செல்லவிருக்கும் திருமகட் டலைவனும் திருமாலைக் கடைக்கண்ணோக்கால் நிறுத்திக்கொண்டு, உமாதேவியைப் பார்த்துத் தனக்குச் சொக்கட்டானாட விருப்பமிருப்பதாகத் தெரித்தார்.

அங்ஙனம், வியனுறும் விமலன் விருப்பத்திற்கு இமயவல்லியு மிசைந்துத் தன்பாலுள்ளத் துணைவி (சேடி-தோழி)யைத் திருக்கண்ணோக்க, வுடனே சேடியும் அகில காரணியடி வணங்கிப் பணிப்பதென்ன வென்றாள்.

அவ்விதம் வினவிய சேடியரை ஜெகன்மாதாவானவள் நோக்கி, சொக்கட்டானாடத் தக்கவைகளை விரைவிற்கொண்டு வருவாயெனலும், அங்ஙனமே சேடியுந் துரிதமாகச் சென்று நவரத்தின கசிதமான பொன்னாலாற்றிய பலகையையும், மரகதம், மாணிக்கம், கோமேதகம், இந்திர நீலம், வைடூரியம், பவழம், முத்து, புட்பராகம், வைரம் முதலிய நவரத்தினங்களாற்செய்யப்பட்டக் காய்களையும், முழுவைரத்தாலியற்றிய

பாச்சிகைகளையுங் கொணர்ந்து வைத்துத் துணையடி பரவித் தொழுது நின்றாள்.

உடனே அகில காரணியும், அகிலகாரணனும் சொக்கட்டான் ஆடுமுறைப்படி பலகையிட்டுக் காய்களைவைத்து வைரப் பாச்சிகை யுருட்டி ஆடிவரும்போது அகில காரணிக்கே நற்பந்தயம் விழுந்தது. எல்லாம் வல்ல இறைவன் தனக்கு நற்பந்தயம் விழும்படியாகச் செய்துகொள்ளுந் திறன் வாய்ந்திருந்தும், தனது பத்தர்களது திருவுள்ளத்தைக் களிப்புறச் செய்வான் வேண்டி தனக்குப் பந்தயம் தோல்வி (அபஜெயம்) யாகவே விழும்படிச் செய்துகொண்டனர்.

ஓங்கற்செல்வியாம் உலகமாதாவுக்கு நற்பந்தயம் விழவே எம்பெருமாட்டிக்கு என்று மிலாத ஓர் உற்சாகமுண்டானதைக் கண்ட எப்பெருமான் எம்பெருமாட்டிக்கு விழுந்த நற்பந்தயத்தை மறைத்து சமயத்திற் கேற்றவாறு எண்ணிக்கையை ஏற்றியும், குறைத்தும் தனக்கு வெற்றியென்றுரைத்தல் தன் கௌரவத்திற் கழகாமெனத் தேவியை மருட்டிச் செயிக்க வெத்தனித்தார்.

அதுபோழ்து சர்வலோக மாதாவானவள் சினத்துடனும், மனக்கலக்கத்துடனும் விரைந்தெழுந்து செல்லத் துணிந்த குறிப்புணர்ந்த உமாபதி சங்கரியைச் சமாதானத்தோடு பிணக்கொழித்து மீண்டும் சொக்கட்டானாடும்படி ஆக்ஞாபிக்கவே, அமரரெவரும் அகமகிழ்ந்தேத்தும் அம்பிகையானவள் தேவரீர் பேதையாகிய வென்னை மருட்டிச் செயிக்கப் பார்க்கின்றீராகலான், நாம் நமக்குள் நடுநிலையாக ஒருவரை வைத்துக்கொண் டாடுவோமாயின், நாம் நடுநிலையினின்றும் பிறழா திருக்கக்கூடும். ஆகையால், நாம் அதற்கு



*ஐம்படைக் கரனை நடுநிலைமையாக வைத்தாடுவோ மென்றுரைத்தனள்.

உமாபதியு மதற்கிணங்கித் திருமாலை மத்தியஸ்தனாக வைத்தாடுவோம். அவ்விதம் ஆடும்போது உண்டாகும் ஜெயாபஜெயத்தை யவனே யறிந்து கூறட்டுமென்று ஆடத் தொடங்கினார்கள். அதுசமயமும் முன்போலவே ஜெகன்மாதாவுக்கேஜெயமும், சோமசேகரனுக்குத் தோல்வியுமாக ஆயிற்று. அங்ஙனம் தோல்வியுற்றத் தூயவெண்மதிச் சடையோன் றன்னெண்ணத்தை நிறைவேற்றுவா னெண்ணித் தனக்கே வெற்றியென விளம்புமாறு விஷ்ணுவை நோக்கினர். அங்ஙனம், மலைவளர்செல்வி மாயாவினோதனைத் திருமாலை நோக்கி, "மாலவ! நீர் நடுநிலையினின்றும் உண்மையொளிக்காது சொல்லுக!" வெனவும், அனந்தசயனன் அம்மையே! "ஜெகதீசன் செஞ்சடையி லொன்றிய வோர் அற்புதத்தைக் கண்ணுற்று அதிலேயேக் கருத்தைச் செலுத்தியிருந்தே னாகையால், இதனைக் கண்ணுறவில்லை" யெனவும், ஸ்ரீ பரமேஸ்வரி பேஷ்! திருமகட் செல்வ! நீ சொன்ன சொல் மிகவு நன்று! நரர்களின் செய்கையைப் போலன்றோ நின் செய்கையு மிருக்கின்றது! நரர்களன்றோ கௌரவத்தை யோம்பாது சமயத்திற் கேற்றவாறு நடப்பவர்கள்! நீயோ சிறந்த தேவாம்சத்தைப்பெற்றவன்! நீயே தவறுவழித் தழுவுவாயாயின் பிறர் என் செய்யவும், சொல்லவுந் துணியார்கள்? நீ மாயனென்றதற் கேற்ப என்னிடத்திலேயே மாய வஞ்சக மனத்தைக் காட்டினாய்! மாய வஞ்சகனாகிய நீ யாது

* ஐம்படைக்கரன்:—திருமால். ஐம்படையாவன:—சங்கு, சக்கரம், தண்டம், வாள், தனுசு-(வில்) என்பனவாம்.

தான் செய்யவும், சொல்லவுந்துணியாய்! எனக்கு நற்பந்தயமாக ஒருமுறையிருமுறை யல்லாதுப் பல முறையும் பழுதற நற்பந்தயமாக விழுந்தும், விழுந்ததறிந்த நீ நடுநிலையாக வுரையாது ஒரு பாகமாக மொழிந்து, நடுநிலை யிழந்தாய்! இனி யேனும் உண்மையை யுரைப்பாயாகுக!" வென்றுரைத்தான்.

இயமவல்லி யியம்பியது கேட்ட திருமகட் செல்வன் அம்பிகைக்கு அறைகுவது யாதெனத் தோன்றாமல் அஞ்ச வற்றிருந்துப் பின், "அம்மையே! அடியேன்மேல் கோபங் கொள்ளற் றகாது" எனினும், ஜகதீஸ்வரி நீ செய்தபிழையை யோராது, என்னைக் கோபங் கொள்ளற்க வென்று கூறினாய்! சந்திரசேகரன் சாதித்த இத்திருவருளையாட்டா னெவ்வுலகத்தாரு முய்ய வென்பதை நீ யறியாய் போலும்! எம்பெருமான்பால் இணையற்று விளங்கும் திரிநேத்திரங்கள் உண்மையை யொளிக்காதாகலின், அவற்றை அடியாள் கரத்தால் மறைப்பேன். நான் கூறுவது உண்மைக்கு மாறுபடுமாயின் நீலகண்டனார் திரிநேத்திரங்களும் என்றும்போ லொளி விசுக! நான் கூறுவது உண்மையேயாயின் ஒளி மழுங்கி இருள் மூடிக்கொள்க" வென்றுரைத் தெழுந்து காமனைக் காய்ந்த சோமசுந்தரனின் திருக்கண்களைத் தாமக்குழலியான சங்கரிதன் மலர்க்கரத்தால் மறைத்து நின்றாள்.

அவ்விதம் அம்பிகை அமலன்றன் திரிநேத்திரங்களை மலர்க்கரத்தால் மூடவே, உலகெங்கும் இருள் சூழா நிற்க, உலகிலுள்ளா ரெவர்களும் ஒன்றுந் தோன்றாது ஊழிக்கால விருளோ விதுவென மயங்கித் தியங்கினர். உலகில் பேரிருணிறையவே எத்தொழிலுஞ் செயலற்றுப்போயின. முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்



ணாயிர மிருடிகளும், பிறதேவர்களும் தத்தம் நிலைதடுமாறி யவஸ்தையடைந்து ஸ்ரீ பினாகபாணியையும், ஸ்ரீ பரமேஸ்வரியையும் நினைவிலேத்திப் பணியுமுளத்தினர்களாய்த் திருக்கைலையணுகி, மூவா முதலே! முத்திக்கு வித்தான முழுமுதற் கடவுளே! உலகமீன்ற உமையே! அன்பர்கள் அல்லலகற்றும் அன்னையே! அவதியுறும் அடியேங்களைக் காத்தருள் செய்யவேண்டுமென்றுப் பிரார்த்தித்துக் கூட்டங் கூட்டமாக நிற்கின்றவர்களை நந்தியெம்பெருமான் திருக்கடைவாயிலிருக்கும்படிச் செய்து விமலனிடஞ் சென்று முறையிற் பணிந்து வணங்கி நின்று, உம்பரெவரு முவந்து போற்றும் எம்பெருமானே! எவ்வுலகும் பேரிருணிறையவே தேவர்கள், முனிவர்கள், இருடிகள் முதலானோர் மிகுந்த மனவருத்தத்துடன் திருக்கடைவாயிலில் வந்திறைஞ்சி நின் கின்றார்களென் றறிவிக்க, கருணாகரன் கட்டளையின்படி வந்தவரெவர்களும் வரைசிலைபண்ணலைப் பணிந்திறைஞ்சிப் பின், மாயாசுந்தரியின் மலரடி பணிந்து, "அன்னையே! நின்னருந் திருவிளையாட்டா லுலகமெலாம் அந்தகாரத்துக் குட்பட்டு, நின்மக்களாகிய நாங்கள் நிகழ்த்தொணாத் துன்புறுகின்றோம்! மக்கள் வருத்தமகற்றுங் கடமை மாதாவைப் பொறுத்ததன்றோ? எங்கள் இடுக்கணைக்கன்று இன்புறவிருளகற்றி யிரட்சிக்கவேண்டும் அன்னையே!" என்று வணங்கிய உலகினரை யுய்விப்பானுவந்த உமாதேவியார் கருணையுட் கொண்டுத் தன் மலர்க்கரத்தை முதல்வன் திருமுகத்தினின்றெடுக்க உடனே எல்லாவுலகங்களும் இருளகன்று முன்போல் அனைத்தும் விளங்கக் கண்டு அவரவர்களும் தத்தம் தொழிலி லீடுபடுவான் வேண்டி விமலனைப் பணிந்தனர்.

அங்ஙனம், திரிபுரதகனன் திருக்குறிப்புணர்ந்த திரு நந்திதேவர் நவரத்தின கசிதமான பாதுகைகளைக் கொணர வும், அங்கு தன்னைச் சூழ்ந்து நின்ற தேவர்களும், சிவ கணங்களும் குழுமிவர தேவவாத்திய மொலிக்கச் சோதி மயமான வேறு மண்டபத்தி லாரோகணித்துத் தன்னைச் சூழ்ந்து வந்தவரெவர்களுக்கும் கருணாநிதியாம் கங்கை வேணியன் தண்ணருங் கருணைத் தழைங்கிடச் சாற்றி, "அன்பர்காள்! நமது உமையின் திருவிளையாட்டால் எமது திருக்கண்கள் மூடப்படவே நீங்கள் இத்துயருற நேர்ந்தது. இனி, இவ்விதமாக எதிர்பாராவண்ணம் இடையூறொன்று மணுகாதாகலின், அஞ்சேல்! அஞ்சேல்!!" எனறு கூறி, அவரவர்களும் தத்தமக்குற்ற அருப்பெருந் தொழிலைச் செய்க வென்று கட்டளையிடவே, வந்தவரெவரும் மங்கை யோர்பாகன் மலரடி வணங்கித் தத்தமிருப்பிடஞ் சேர்ந் தார்கள்.

அதன் பின்னர் ஆலமர் கடவுள் மண்டபத்தை விட்டு உள்ளே யடைந்து ஆங்குள்ள சித்திரச் சிம்மாதனத்தி லமர்ந்தனர். உடனே உமாதேவியும் உட்சென்று ஆங்கு நிறுவப்பட்டிருந்த வைரத்தூணருகினின்றுத் திரிபுராந்தகன் திருமுகத்தை நோக்கி யிருக்குஞ்சமயம் தேவியின் திருமுகத் தைத் திருக்கண்ணோக்கிய சிவனடியைச் * சிவைபணிந்து, "எம்மையனே! அடியாள் தெரியாதிழைத்தப் பெரிய பிழை யைப் பொறுத்தருள் புரிய வேண்டுமென்றும், பின்னுறுங் கெடுதியைப் பேதையானறியாமல் செய்த பெரும் பிழையி

* சிவை-சத்தி.



னின்று மகற்றிப் பிழைப்பிக்கச் செய்யவேண்டுமென்றும் இறைஞ்சிக்கொண்டிருக்குங் காலத்து, நந்தியம் பெருமான் வந்திறைக் கழலிணைப்பணிந்து தென்றிசைத் தலைவன் தேவ ரீர் திருவடிகண்டு வணங்குவான் வேண்டித் திருவாயிலில் வந் திருக்கின்றானென்று விளம்ப, வாமதேவன் வந்த மறலியை வரவிடும்படிக் கட்டளையிட, உடனே நந்தியம்பெருமான் சென்று தருமனை யுள்ளே செல்லவிட, சென்ற வந்தகன் சுந் தரச் சிலம்பணி சந்திரசேகரனை நமஸ்கரித்துப் பணிந்து நிற்கவும், பாசுபாணி தன் பக்கத்திருந்த பக்தனான நந்தியைப் பார்த்து வந்த கூற்றுவன் காரணமென்னவென்று வினவவும். தென்றிசைக்கோன் மீண்டும் சூலபாணியின் திருவடி பணிந்து கைகட்டி, வாய்பொத்தி, "எல்லாம் வல்ல எம் பெருமானே! உலகெலாம் பேரிருணிறையவே பிறங்குமெத் தொழிலுந் தடுமாறிப் பாதவிக்கும்படி நேர்ந்தது. செயலற் றுப் பாதவித்ததற்கு ஏதேனும் பிராயசித்த முண்டோ? உண்டானால் அவற்றை அடியேன்பா லருள்சுரந் தருளல் வேண்டுமென் றிரந்தபோது, அருகினின்ற அருமறைச் செல்வியாம் அம்பிகை பயந்து நடுங்கி அடியாள் அறிவில் லாது செய்ததாலன்றோ அகிலமெங்கணும் அவல்லை யணுக லாயிற்று உள்ளத்தோறுது இழைத்த ஊறின் பாவத்தைப் போக்கி யருள்புரிய வேண்டுமென்று ஆலமர்க்கடவுளடியினை யிறைஞ்ச, பரமன் "பாசிவையே! நீ பாபத்தை யெல்லாம் பதறியோட்டத் தக்கவளாதலின், உன்னை பாபநாசினி யென்றே பகரலாம்! நீ என்றும் என்னுளுறைந்திருப்பவளாத லால் எத்தகைய பாபமும் உன்னை யணுகா! ஆகவே, நீ எதற்கும் அஞ்சேல்!" என்றியம்பிய இறைவனை மலைமடந்தை

"தேவரீர் திருமேனியிற் கலந்துள்ளவளாயினும், ஊறிழைத்த வென்னைத் தங்கள் திருமேனி ஏற்காதாகையால், அடியாளுய்யும் வண்ணம் அன்புகூர்ந்து அருளளிக்க வேண்டு மென்றும் பன்முறை பாதத்தில் வீழ்ந்துப் பணிந்த பரையைப் பரமன் பார்த்து பக்கத்திருந்த பக்தனை *நடுவனறியும்படியாகப் பின்வருமாறுப் பேசுவாராயினர்.

"பிரியை! சுவர்க்க, மத்திய, பாதாள மென்னும் மூன்றுலகத்தாரும் முத்திபெறத் தக்கதாயும், நாமென்று மிடையறாத இன்பமயமாய்த் திகழத் திருக்கோயில் கொண்டெழுந்தருளியதான விக் கைலயங்கிரிக்குத் தெற்கில் சிவத்தலங்கள் ஆயிரத்தெட்டுண்டு. அச்சிவத்தலங்கள் ஒவ்வொன்றிலும் § மூவகைச் சிறப்பு மொருங்கே யமைந்துளது. அவற்றை யீண்டுரைக்கப் புகின் விரிவாகும்.

மூவகைச் சிறப்பு வாய்ந்த தலங்கள் ஒவ்வொன்றிலும் சென்று தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, அத்தலத்துறையும் மூர்த்தியைத் தரிசித்து, அத்தலவாசமியற்றி வருவாயானால், உன் பாபங்களெல்லாம் பரிதியைக் கண்ட பனிபோலாம். நீ அவ்விதம் தரிசித்து வரும்போது உனக்கு நற்குறியாக இடது புஜமும், இடது கண்ணும் துடிக்கும். அவ்விதம் துடிக்கின்ற விடத்தில் அத்தலத்திலுள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து விதிமுறைவழாது தவஞ் செய்வாயானால் நீ செய்த அபசாரமாகிற பாபம் அகன்றுபோம். நாம் அது போழ்து ஆங்கெழுந்தருளி, அத்தலத்துறைவார் யாவரு மறிய உன்னை யாட்கொண்டு கலியாணஞ்செய்து கொள்வோ மென்று திருவரைச் செல்வன் திருவாய் மலர்ந்தருளினர்.

*நடுவன்—தருமன். §மூவகைச் சிறப்பென்றது—மூர்த்தி, தலம், தீர்த்தம், யென்றதை.



இவையனைத்தும் உடனிருந்து கேட்ட திருமகட்டலைவனும், தென்றிசைக்கோனும் விண்ணவர் போற்றும் விமலன்றன் மெல்லடி பணிந்து விடைபெற்றுத் தத்தம் பதிக்குச் சென்றார்கள்.

அதன் பின்னர், உமாதேவியார் உலகினர் தன் உண்மையை யுணருவான் வேண்டியும், உலகினரை உய்விப்பான் வேண்டியும், தலைவன் கட்டளைப்படித் தவஞ்செய்யப் புறப்பட்டுத் தனக்குதவியாக சப்த மாதர்களான இந்திராணி, கௌமாரி, வைஷ்ணவி, மகேஸ்வரி, பிராம்ஹி, வராகி, சாமுண்டி முதலியர்களைக் கூட்டிக்கொண்டு கைலயங்கிரியை விட்டு நீங்கிப் பூலோகத்தை யடைந்தனள்.

திருக்கைலாயச் சருக்கம்

முற்றிற்று.

---

## 3. தேவியார் திருத்தலங் கண்டச் சருக்கம்

ஆர ணத்திரு மாலு நான்முக னுன வந்தனன் காண்கிலாப்
பூர ணனுமை யாக மேந்திடும் புண்ணி யன்பொலி கேத்திரச்
சீர ணங்கிணைற் றூயெ னுந்திரு செப்ப வாக்கிருப் பாதிரி
யார மாரண மார திந்தினி தாற்ற வல்லுன னம்மமா!

சௌனகாதி முனிவர்கள் சூதபுராணிகர் திருவடிகளைப் பணிந்து, பேருணிறைந்தப் பெரியீர்! எம்பெருமாட்டியின் பாபத்தை யகற்றிய வப்பெரும் பதியாதென்றும், தேவியார் சித்தமுவந்து

எல்லாத்தலங்களைப் பூசித்தாரென்றும், அவற்றை யடியேங்களுய்யும் பொருட் டருள் கூர்ந்துச் சொல்லல்வேண்டுமெனப் பிரார்த்திக்க, வேதம் நிலையறிந்த சூதமாமுனிவர் பின் வருமாறு சொல்லத் தொடங்கினார்.

"ஏ! முனிவர்காள்! நீங்கள் நல்ல கேள்வியையே கேட்டீர்கள். அவற்றைக் கூறுகிறேன். கவனமாகக் கேளுங்கள்! மலைவளர்ச் செல்வி சப்தமாதர்களும் தன்னைச் சூழ்ந்துவர கைலயங்கிரியைவிட்டுப் புறப்பட்டு கங்கை முதலான புண்ணிய தீர்த்தங்கள் பொருந்திய வநேக சிவத்தலங்களிலும், காளஹஸ்தி, அருணாசலம், ஸ்ரீ சைலம் முதலியவைபோன்ற மகிமை வாய்ந்த மலைகளிலும், அம்மலைப் பாங்கருள்ள தலங்களிலும் விளங்கும் புண்ணிய தீர்த்தக்கரைகளிலும் பிரமன், விஷ்ணு, இந்திரன் ஆகிய முப்பத்து முக்கோடி தேவர்கள், அஷ்டதிக் பாலகர்கள், அஷ்டவசுக்கள், அநேக தேவதாஸ்திரிகள், கருடர், காந்தர்வர், சித்தர், வித்தியாதரர், யக்ஷர் முதலானவர்களும், ஒவ்வொரு காரணமாகத் தங்கள் தங்கள் குறை யகன்று, நிறைந்த அபீஷ்டங்களை யடைதற்காகப் பூசித்தவைகளும், *பிறப்பு, இறப்பு, தரிசனம், நினைத்தல் முதலியவற்றால் முத்திதரத்தக்கவைகளும், சைவ சமயாசாரிகள் முதலானவர்களால் புகழ்ந்தோதப்பெற்றவையும், எண்ணற்ற அற்புதச் செயல்கள் நிகழ்ந்தவைகளும், பத்தர் அநேகர்கட்கு அரிய முத்தியளித்தவைகளும், † பஞ்சபூத ஸ்தலங்களும்,

* பிறப்பு—திருவாரூர், இறப்பு—ஸ்ரீகாசி, தரிசனம்—சிதம்பரம், நினைத்தல்—அண்ணாமலை.

† பஞ்சபூதஸ்தலங்களாவன:—1-காஞ்சிபுரம். (பிருதிவி) 2-திருவானைக்கா (அப்பு) 3. திருவண்ணாமலை (தேயு) 4. காளத்தி, (வாயு) 5-சிதம்பரம் (ஆகாயம்) என்பனவாம்.



அட்ட வீரத் தலங்களுஞ் செறிந்து விளங்கும் பல தலங்களிலுஞ் சென்று, ஆங்காங்குள்ள அரிய நற்றீர்த்தங்களில் வியன்பெற விதிப்படி ஸ்நானஞ் செய்து, நித்திய கருமானுட்டானங்களை முடித்துக்கொண்டு, க்ஷேத்திர வலம் வந்து, திருக்கோயிற் புக்கி, இறைவனை முறையிற் றியானித்துச் சோடசவுபசாரங்களைச் செய்து கண்குளிரத் தரிசித்து, செவிகுளிர அவ்வத்தலங்களின் மகிமைகளைக் கேட்டானந்த வாரிதியிலாழ்ந்து, அத்தலத்தில் மூன்று தினத்திற்குக் குறையாது வதிந்து வசித்துப் பின்னர் சந்நிதி யடைந்து விடையேற்று மீண்டும் வேறொருதலம் புக்கி, யங்குங் கிரமப்படி யீசனைத் தொழுதிறைஞ்சி யின்பமடைந்து வருங்காலை யம்பிகைக்குத் தான் கைலை வாசனைப் பிரிந்துவந்ததின் எண்ணமேலிட்டது.

அங்ஙனம், அம்பிகை தனக்கு இறைவன் குறிப்பிட்டுரைத்த க்ஷேத்திரம் காணப்படவில்லையே என்று மிக்க மனவருத்தங் கொண்டு ஒன்றுந் தோன்றாதவளாகி நாமிதுவரை எண்ணற்றத் தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தும், கணக்கிலடங்காதவாறுக் கடவுளைத் தரிசித்துப் பணிந்து வந்தும் இந்நாள் வரை யாதொரு பலனும் பெற்றேமில்லை.

கங்கையைச் செஞ்சடையிற் றரித்த கங்காதரன் கங்கை தன்னிடமுள்ளதால் அவள் மீதுற்றக் காதலால் நம்மைப் பிரித்திங் கனுப்பினர்போலும்! ஆயினும், நம்மிடத்துள்ள பிரியம் பொய்க்குமோ? நாம் முன்னொருகால் திருக்கைலையில் திரிநேத்திரனுடன் அன்னியோன்னிய மற்று வீற்றிருக்கும்போது, தாசனாகிய பிருங்கி பிரதட்சணஞ் செய்த காரணத்திற்காக நமக்குத் திரேகத்திற் பாதி யீந்

திருப்பரோ? ஆகா! என்ன நாம் பேதைமதியால் தப்பெண்ணங் கொண்டோம். தவறெண்ணுதற் றகாது. நாம் முன்னம் அறியாதொன் றியற்றியதன் காரணமாகத்தான் இத்தகை வவதியுறுகின்றேமே. ஆகையால், இனி எதையும் யோசியாமல் நினைத்தலும் செய்தலுங் கூடாது என்றெண்ணித் திருவருளைச் சிந்தையிலேத்தித் தியானித்துக் கொண்டிருக்கும் திரிலோக மாதாவுக்கு என்றுந் தோன்றாத ஒருவித பெருமகிழ்ச்சி யுள்ளத்திலே யெழும்படியாக ஒருவகையான நறுமணம் கமழும் வாசனை யெழலாயிற்று.

அவ்விதமுண்டான வாசனையின் காரணமாகத் தோன்றாத்துணைவியாம் சாம்பவிக்கு ஓர் எண்ண முண்டாயிற்று. அதாவது, நாம் கைலையங் கிரியை விட்டுப் புறப்பட்டது முதல் ஈண்டெழுந்த மாதிரி நறுமணம் நமக்கெங்குங்கிடைக்கவில்லை. ஆகவே, இவ்விடத்திலெழுந்த வாசனையால் இங்கு ஏதோ விசேடமிருக்கின்றதென்றெண்ணி வாசனை வரும் திசையை நோக்கித் தன்னுடன் வந்த சப்தமாதர்களுடன் செல்லத் துணிந்து செல்லும் வழியில் ஓங்கி வளர்ந்து தழைந்த விருக்ஷங்களையும், பலவகைப்பட்ட புட்பச் செடிகளையும் உடைத்தான அவ்வனத்துள் மிருகங்கள், பட்சிகள் முதலியவைகள் விரோதமின்றி நட்புபாராட்டி ஒன்று சேர்ந்துலாவுதல், மேய்தல், நீரருந்துதல், வசித்தல் முதலியவற்றைக் கண்டும், பஞ்சாட்சர மந்திரதை யோதும் பட்சிகள் வனப்பையும், தவச்சிரேட்டர்கள் அக்கினி வளர்த்திச் செய்யும் யாகங்களையும், வேள்விக்கு வேண்டிய சமித்து முதலியவற்றையும், பழவர்க்கங்களையும் மந்திகள் கூட்டங் கூட்டமாகக் கூடிச் சென்று கொண்டுவந்து சேர்ப்பதையும், ஆவி



னங்கள் தாங்களே பிறர் உதவியின்றிப் பால் சொரிவதையும், சிங்கம், வேங்கை, சிறுத்தை முதலியவைகள் ஒருங்குகுழுமி யாகத்துக்கு யாதொரு தீங்கும் வாராவண்ணம் காவல் காப்பதையும், எங்கும் வேத முழக்கங்கள் ஒலிப்பதையுங் கண்ட தேவியார் பேரானந்தங் கொண்டுப் பின்னும் அவ்வனத்தினுட் செல்லும்போது பொன்னெனப் பொலியும் தாமரை, நீலோத்பலம், செங்கழுநீர் முதலிய பூக்கணிறைந்தத் தடாகமும், அதில் அன்னம் முதலிய நீர் பறவைகள் சூழ்ந்து நிறைந்தது மான மனோரமணீயத்தைத் தரும் தடாகங்களைக் கண்டு களித்த விறைவி வெண்மதி சூடிய விமலன் விளங்குமிடமிதுவோ வென்றய்ய முற்றுச் செல்லுங்காலத்து, அம்பிகைக்கு முன்னர் கைலையங்கிரியில் முதல்வ னருளியவாறு இடது புஜமும், இடது கண்ணும் துடித்தன. அது கண்ட அகில காரணி யையன் நமக்களித்தத் திருவாக்கைப் பூர்த்தி செய்யத்தக்க விடமிது தானென்றுச் சந்தோஷத்துடன்நோக்கும்போது ஆங்கு அநேக சிவலிங்களிருப்பதைப் பார்த்ததும் அகில காரணிக்கு அளவற்ற வானந்த முண்டாகி நமதையன் பணித்த விடமிதுவே என்பதற்குச் சந்தேக மில்லையென்று அவ்வன மெங்கும் வலம்வந்து நமஸ்கரித்தெழுந்துப் பின் அவ்வனத்தின் உத்திர திசையில் ஜீவ நதியாய் ஓடிக்கொண்டிருக்கிற கெடிலமா நதியை யணுகி விதிமுறை தவறாது நீராடி விபூதி தரித்துப் பின் அதற்கு வடபாற் சென்றாஉ இருகரையுந் தண்ணிழல் தரும்படியான சோலை சூழ்ந்திலங்கும் பெண்ணை நதியில் ஸ்நானஞ் செய்தும் அவ்விடம் விட்டகன்று திருப்பாடலீஸ்வரன் எழுந்தருளிய விடத்துக்கும், கெடிலமாநதிக்கும் இடையிலுள்ள பாலோடை யென்

னும் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து விபூதி பூசி, உருத்திராக்க மாலை சிரத்திலும், கழுத்திலுந் தரித்து சிவை சிவபூசை செய்யத் தொடங்குங்கால் எங் கணு நிறைந்திலங்கும் அருட்பெருஞ் சோதியாம் பரசிவன் விண்ணினின்றுஞ் செகதீஸ்வரியின் செவிக்கெட்டுமாறு பின் வருமாறுக் கூறுவாராயினர்.

"அன்பிற் படிந்த அம்பிகா! எவர்களாலும் திரிகரணங் களாகிற மனோவாக்குக் காயங்களாற் செய்யப்பட்ட பிரம ஹத்தி பாபங்களும், கொலை, களவு, கள், காமம், வஞ்சனை முதலிய பஞ்சமா பாதகங்களும் இத்தலத்தை மிதித்த மாத்தி ரத்தி லவையனைத்தும் காற்றிலகப்பட்ட பஞ்சுபோல் பறந்து போவதுடன், அவர்கள் சர்வலோக சரண்யனான சம் புவின் சாசுவதமான பதத்தை யடைவார்கள். தவிரவும் ஒரு தரமேனும் விளையாட்டாக வில்வத்தை விமலன்மேலெறி வார்களானு லவர்கள் செய்துள்ள கொடும் பாவங்களெல்லாம் அனலிலகப்பட்ட பஞ்சுபோலாம்" என்றியம்பிய இறைவன் றிருவாக்கைச் செவியிலேற்றத் தேவியார் பிரதக்ஷியமாகக் காண்பான் வேண்டித் திரிபுரதகனன் திருப்பாதிரியின் மூலத் தில் சோதிசொரூபமாய் விளங்கா நின்ற சிவலிங்கத்திற் கலந்தருளினர்.

## தேவியார் திருத்தலங் கண்டச் சருக்கம்

முற்றிற்று.

---



## 4. உமாதேவியார் தவம்புரிச் சருக்கம்

மறைமுடி விலங்கு மன்னை மாண்புறு கைலை நீங்கி
நிறைமுடி தவமே யாற்ற நீடியர் புலிசை யொன்றி
முறைமுடி வாக வாங்கு முன்னவன் பணித்த வாறே
இறைமுடி யடிக ளேத்தி யினியசோன் பாற்ற லானன்.

உலகிற் கெல்லாம் காரணியாகிய உமாதேவியார் இத்தலத்திலுறையும் இறைவனை வணங்கி வழிமுறையிற் பூசிப்போமானால் நாமியற்றிய பாவங்களியாவும் நீங்கப்பெற்றுய்வோம். பரம கருணை நிதியாம் பரசிவம் நம்மை யாட்கொண்டு, முன்னர் நம்பிடம் நவின்றவாறு இத்தலத்திலுள்ளார் யாவருங் காணத் திருமணம் புரிந்து கொள்வா ரென்று ஆனந்த வெள்ளத்தி லாழ்ந்தினவராய் அத்திருப்பாதிரிவனத்தின் மத்தியில் திருப்பாதிரி விருக்ஷத்தினடியில் சோதிமயமாகத் தோன்றி விளங்கும் பாடலீசுரனைப் பண்புடன் கண்டு, பரமானந்தங் கொண்டு, முன்னாள் முதல்வன் மொழிந்ததை விண்டுப் பணிந்தெழுந்து கரங்கூப்பித் தன்னை மறந்து, அன்பெனும் பக்தி பதித்து, மெய்ஞ்ஞானம் பிறந்து, எவற்றையுந் துறந்து, படைத்தல், காத்தல், அழித்தலென்னும் முத்தொழிற்கும் முதல்வனான சித்தேஸ்வரனைப் பக்தியோடேத்திப் பூசிக்க வெத்தனிக்கும் போது *பாங்கருள்ள சப்தமாதர்கள் சாம் பவி செய்ய வெத்தனிக்கும் தவத்திற்குகந்த பூஜா திரவியங் களைச் சேகரித்துக் கொணர்ந் துதவுவதைக் கொண்டு சாம்

* பாங்கர்—பக்கம்.

பலி சங்காரனைத் தியானித்துச் சோடச வுபசாரங்களைச் செய்து நேமமாக மும்முறை பிரதக்ஷிணஞ் செய்து, ஐம் முறைப் பணிந்து, நாத்தழும்புற தோத்தரித்து, சிவாநுபூதிச் செல்வராம் தவச் சிலர்களுக்கும், அந்தணர்களுக்கும் முறைப்படி பல வரங்களைச் செய்து பகவத்தியானத்தோடு * அப்பாடல விருக்ஷத்தினடியிலேயே அரிய தவஞ்செய்து கொண்டிருந்தாள்.

அவ்விதம் அகிலகாரணி அநேக காலமாக அரிய தவஞ் செய்தும் யாதொரு பலனுமடையப் பெறாததால் வேனிற்காலத்தில் அக்கினி மத்தியிலும், † கார்காலத்தில் நீர் நிலையிலு மிருந்துந் தவஞ் செய்யவேண்டிய விதிமுறைகளை யனுசரித்துத் தவமியற்றியும், கருணாகரனைக் கருத்திலிருத்தித் தலையைப் பூமியி லூன்றித் தனதருமை மக்களான கணபதியுங் கந்தனுங் காணாது வருந்தி யலையும்படி, தன்னுடன் வந்த சப்தமாதர்கள் தன்னைச் சூழ்ந்து தன்னேவற்படி பணி புரியத் தவமியற்றும் கன்னிகா பரமேஸ்வரியி னரிய தவத்தின் காரணமாகப் பல க்ஷேத்திரத்தின் மகிமையை எவரும் எளிதிலறிந்து இறைவனை வழிபடுவான் வேண்டி எல்லாம் வல்ல இறைவன் தனது சிவகணத்தவர்களி லிருவரை நினைத்தனர்.

அவ்விதம் அமலன் நினைத்த மாத்திரத்தில் தூர்ச்சடி யென்ற குருவும், பிரமசன்மன் என்ற சீடனும் தோன்றினர் தோன்றியவர்கள் குரு சிஷ்ய முறை வழுவாது வியன்பெற

* பாடல விருக்ஷம்—பாதிரி மரம். § வேனிற்காலம்—வெய்யிற் காலம். † கார் காலம்—கார்-மேகம், மேகத்தாலய மழைக்காலம் என்ப.



வநேக சிவத்தலங்கள் புக்கு, ஆங்காங் கெழுந்தருளிய அந்தி வண்ண னடிமலரிறைஞ்சி வணங்கிப்பணிந்து தரிசனஞ்செய்து கொண்டு அகிலாண்ட நாயகியும், அண்டினோரைக் காக்கும் அம்பிகையுமான எம்பெருமாட்டித் தவமியற்றுந் திருப்பாதிரிவனம் வந்து, அன்னை யாருகில் குருவாகிய தூர்ச்சடி பதுமாசன மிட்டமர்ந்திருக்க, அங்ஙனம் சற்சீடனும் பிரம சன்மன் குருவின் றிருவடி பணிந்தெழுந்து, "இருளகற்றும் இனிய சற்குருவே! புண்ணியம் பழுத்துப் புனிதமிக்கோங்கு மித்தலத்தின் வைபவத்தை வியனுற விளம்பவேண்டு மென்றிறைஞ்சிப் பிரார்த்திக்க, அங்ஙனம், ஆசிரியராகிய தூர்ச்சடி சூலபாணியின் றனைபடி பகரச் சொல்லத் தொடங்கினர்.

உமாதேவியார் தவம்புரிச்சருக்கம்

முற்றிற்று.

---

## 5. தலவிசேடச் சருக்கம்

உடுக்க ணுயக ணுறைந்த வெம்பழி யூறி யோங்கிடற் கொள்ளருட்
கொடுக்க மாமலர்க் காத்தி னேந்திதன் கோல வார்சடைக் கட்டினோ
னடுக்க வாகிய வருமை யந்தல மனைத்தி னுந்தலை யாகுசீ
ரொடுக்க நீர்க்கிடும் புலிசை யம்பதி யுண்மை யோதவ னுண்மையே.

ஏ! நைமிசாரணிய வாசிகள்! "எம்பெருமாட்டித் தவஞ்செய்து பெறுதற்கரிய பெரும் பேறடைந்த தலத்தினது விசேடத்தை தூர்ச்சடி பிரமசன்மனுக்குச் சொல்லியவாறே சொல்லுகின்

றேன்! கவனமாய்க் கேட்டு வாருங்க" ளென்று சூதபுராணி
கர் சொல்லத் தொடங்கினார்.

"மாண்பு மிக்க மாணவ! நாம் இது போழ்து இருந்
தனுபவிக்கும் இந்த க்ஷேத்திரம் போன்று நாமிதுவரையில்
கண்ட க்ஷேத்திரங்களை யொப்பிடற் றகாது. அவ்வளவு
சிறந்த உத்தம க்ஷேத்திரமிதுவாம். இத்தலத்திற்கே தனிப்
பெருங் கடவுள் தந்த தனிச்சிறப்பைச் சாற்றலரிதாம். இப்
பெரும்பருமையுற்ற க்ஷேத்திரம் பவழங்களையும், முத்துக்
களையும் தரா நின்ற அலைகளையுடைய சமுத்திரத் தீர்த்தத்
திற்கு மேற்கிலும், தரிசிக்க முத்திதரும் க்ஷேத்திரமாயும்,
தன்னையடைந்த அடியார்களுக்கு ஆனந்தத்தை யளிப்பான்
வேண்டி ஆனந்தத் தாண்டவஞ் செய்யும் சிற்றம்பலமென்
னும் சிதம்பர க்ஷேத்திரத்திற்கு வடக்கிலும், சோழ ராசனுக்
குக் காக்ஷிதந்து, மூவருள் ஒருவராய்த் திகழ மாலாலயங்
கொண்ட திருவஹீந்தபுரி (திருவந்திபுரம்) யென்ற திருமா
லுறையுந் திருப்பதிக்கும், அரவணைச் செல்வன் அடைந்த
அவதாரம் பத்துள் வாமனாவதாரத்தில் மகாபலிச் சக்கிர
வர்த்தியை யடக்கிய தோஷந் தொலையப் பூசித்த சிவத்தல
மாகிய திருமாணிக்குழி யென்றத் திருத்தலத்திற்கும், தார
காக்ஷன், வித்யுன்மாலி, கமலாக்ஷன் என்று சொல்லப்பட்ட
மூன்றசுரர்களும் கிருபாநிதியான கருணாகரனைக் குறித்து
பன்னெடு நாள் பகாதிய தவமியற்றி எக்கடவுளர்களாலும்,
எத்தகைய வாயுதங்களினாலும் முடிவற்ற மேன்மையாம்
வரம்பெற்று, பொன், வெள்ளி, இரும்பு ஆகிய மூன்று
உலோகங்களினால் செய்யப்பட்டவைகளாயும், எப்பொழுது
எங்கு நினைத்தாலும் பறந்தேகத் தக்கவைகளாய் மூன்ற



மூவருள் பெற்று, பெற்ற வரத்தின் சக்தியால் தேவர்களை
யெல்லாம் வருத்தி வந்த திரிபுரர்களை சிரித்தெரித்தத் திரிபுர
தகனன் திருக்கோயில் கொண்டிலங்கும் திருவதிகை யென்
னும் சிவத்தலத்திற்குக் கிழக்கிலும், மலருறைக் கடவுளா
திய தேவர்களைவர்களாலும், தர்மபாலச் சோழனாலும்
பூசிக்கப்பெற்று, அவரவர்கள் மனோ விருப்பங்களை யடைந்து
இன்பமனுபவித்த காரணத்தால் விமலன் விளங்கும் வில்வா
ரண்ணிய மென்னும் க்ஷேத்திரத்திற்கும், பாபமகற்றும் கார
ணத்தால் பாப நாசனியான கங்கை தானேற்றுள்ள பாபங்
களைப் போக்கிக் கொள்ள மகராசியில் அருணனுள்ள ஐந்து
தினங்கள் ஸ்நானஞ்செய்வதற்குகந்ததான பினாகினி யென்னும்
புனித நதிக்குத் தென்பாலுள்ளதாயும், என்று மழிவிலாத
தாயுமிருக்கிற இப்பாடலவனத்தில் திருக்கோயில் கொண்
டெழுந்தருளியிரா நின்ற பாடலீசுரனுக்கு பிரம விஷ்ணுக்
கள் முதலான தேவர்கள் கும்பரவி (மாசிமாதம்) யில், சுக்
கில பக்கத்தில் பிரமோற்சவஞ் (வருடோற்சவம்) செய்வித்து
பூரணச் சந்திரோதய நன்னாளில் சமுத்திர தீர்த்தமாகிற பிரம
தீர்த்தத்தில் தீர்த்த மகோற்சவஞ் செய்து, விமலன் வீதி
யுலாக் காட்சியைக் கண்டு பேரானந்தப் பெருவாழ்வி லாழ்ந்
தார்கள்" என்று இயம்பிய தூர்ச்சடியை மீண்டும் பிரமசன்
மன் வினவுவா னாயினன்.

சஞ்சல மகற்றுஞ் சற்குரு நாத! "மகாவைபவங்களடங்
கிய வித்தலத்தின் பெருமை யனைத்தும் அடியேன் கேட்டு
அரனருள்பெற் றுய்யுமா றறைதல் வேண்டு மென்றுப்
பிரார்த்தித்த பிரமசன்மனை தூர்ச்சடி நோக்கி, அன்பனே!

"நீ வினவியது மிகவும் நன்று. அதைப் பற்றி யெனதாசிரிய ரியம்பிய வண்ண மியம்புகின்றேன்.

அநேக கோடி யோசனை சதுரமான விஸ்தீரண முள்ள இந்தப் புண்ணிய பூமியில், அநேக பாபமகற்றும் சக்தி வாய்ந்த பல நதிகள் பாயும் திவ்விய க்ஷேத்திரங்கள் பலவற்றினுஞ் சிறந்ததான இந்தத் தலத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ தோகையம்பிகை யம்மை சமேத ஸ்ரீ தோன்றாத் துணைவராம் பாடலீஸ்வரனுக்கு மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் ஒரு மித்து பூசை புரிவோரும், புரிவிப்போரும், பூசைக்குகந்த சாமான்களைக் கொடுப்போரும் என்றுங் கைலையங்கிரியிலேயே தன் பாத நிழலைத் தரும்படியான மகா பாக்கியத்தை வாமதேவன் வழங்கியருளுவானென்பதிற் சிறிதும் ஐயமில்லை. தவிரவும், பிரம விஷ்ணுக்களாலுந் தேடியு மகப்படாத பிநாக பாணியாம் உத்தாரீசுவரனைத் தொழுதிறைஞ்சுபவ ரெவர்களாயினும் அவர்கள் ஆணவம், காமியம், மாயை என்கின்ற மும்மலமகன்று சகல பேறுகளையும் பெறுவர். அன்றியும், பிறர் பொருட் பறித்தோன், பிறர் மனை நயந்தோன், குருத்துரோகஞ் குயிற்றியோன் ஆகிய எத்தகைய பாதகனாயினும் உத்தமமென்றித்தலத்தில் அதிபக்தி சிரத்தையோடு தங்கி வசித்துப் புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கித் தோன்றாத் துணைவனும் பாடலி நாதனைத் துதிப்பாராகளே யாயின் அவர்கள் பாபங்களெல்லாம் அழலிற் பட்ட பஞ்சுபோலாகி யுண்மை ஞான முண்டாகும்.

இதன்றியும், இங்குள்ள புண்ணிய தீர்த்தங்களிற் றிரிகரண சுத்தியுடன் ஸ்நானஞ் செய்வாரெவர்களுக்கும் அனைவராலும் அருவருக்கத்தக்க குட்டம் முதலிய நோய்க



ளகன்று, நல்ல மேனியோடுங்கூடிய சரீரத்தையும், புத்திர பாக்கியங்களையும், குறையாத நிறைந்த செல்வத்தையும் பெறுவார்கள்.

மேலும்; *அட்டமாசித்தியும், சிவஞானத் தெளிவும் பெறுவர் என்பது முண்மையே. காரணம், உலகிலுள்ள சிறந்த சிவத்தலங்களில் சிவைபரஞ் சுடரோன் ஒவ்வோர் கலையுடனிருப்பர். இந்தப்பாடல க்ஷேத்திரத்திலோ வெனின் அகில காரணன் ஆயிரத்தெட்டு கலைகளுடனே யமர்ந்திருப்பர்.

பிரிய மிகுந்த பிரமசன்மனே!" எவ்விதம் மலைகளில் மகா மேருவும், விருக்ஷங்களில் கற்பகத்தருவும், உலோகங்களிற் பொன்னும், மணிகளில் உருத்திராக்கமும், நதிகளில் பாகிரதியும், தடாகங்களில் மானசத்தடாகமும், தானங்களில் அன்னதானமும், விரதங்களில் சோமவார விரதமும், வேள்விகளில் அக்கினிட்டோமமும், மந்திரங்களில் பஞ்சாட்சரமும்,

---

* அட்டமாசித்திகளாவன :—அணிமா—மிகச்சிறிய உயிர்கடோறும் அவைகளினும் மிக நுண்ணிய அணுவளவாய்ச் சென்றிருத்தல். 2. மகிமா—பிரிதிவி முதலிய சகல தத்துவங்களும் உள்ளும் புறமும் வியாபித்து நீங்காதிருக்கும் பெருந்தகைமை 3. லகிமா—மலைபோலப் பாரமாயிருப்பினும் பரமாணுக்கள் போல எடுத்தற் கெளிதாயிருத்தல். 4. கரிமா—பரமாணுபோன்ற வடிவுடைத்தாயினும் மகா பர்வதத்தினும் (பர்வதம்—மலை) கனத்தல். 5. பிராப்தி—விரும்பின பெறுதல். 6. பிராகாமியம்—பரகாயப் பிரவேசஞ் செய்தல்; அபேக்ஷித்த போகம் யாவும் எண்ணியபடி யெல்லாம் இருக்குமிடத்தேயே வருவித்து அநுபவித்தல் முதலிய வல்லமை. 7. ஈசத்வம்—கடவுள் தன்மை யடைதல். 8. வசித்வம்—மானிடர், மிருகம், ஊர்வன, பறப்பன முதலிய வெல்லாச் சீவன்களையும் தன் வசமாக்கிக் கொள்ளும் சக்தி.

பத்திரங்களில் வில்வமும், மலர்களில் தாமரையும், வேதங்களி லிருக்கு வேதமும், சாதிகளிற் பிராமணியமுஞ் சிறப்புடையதென்று சொல்லப்படுகின்றதோ அவ்விதமே பூவுலகிலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களில் மிகச் சிறந்து விளங்குவது பாதிரி வனமென்னும் க்ஷேத்திரமேயாம்.

இப்பெருஞ் சிறப்பெய்திய வித்தலத்தில் உதக நாயதி, ஒள்ளமுற்பகவன், மங்கணமாதவன், உபமன்யு முதலியவர்களும், உமா தேவியார், சப்தமாதர் முதலிய பல பெண்மணிகளும், அநேக வரசர்களும் பூசித்துப் பேறடைதற்குக் காரணமாயுள்ளது வித்தலமேயாம். ஆகவே, எத்தலங்களிலுஞ் சிறந்தது வென்றுரைத்த தூர்ச்சடியை சீடனான பிரமசன்மன் நமஸ்கரித்துப் பின்னும் இத்தலத்தின் பெருமைகளைப் பெட்புடனருள வேண்டுமெனப் பிரார்த்தித்தனன்.

அவ்விதம் பிரார்த்தித்த பிரசன்மனைத் தூயநற் குருவாம் தூர்ச்சடி நோக்கி, அறிவு சான்ற அன்பனே! "நீ கேட்பது ஒவ்வொன்றும் ஒப்புயர்வற்ற வொண்மைத்தாகும். நான் அது பற்றி அளவற்ற வானந்தங் கொள்கின்றேன். ஆகவே, நீ வினவிய வித்தலத்தின் பெருமையை இன்னுஞ் சிறிதியம்புகின்றேன்" என்று கூறிச் சொல்லத் தொடங்கினர்.

பிரமசன்மனே! முன்னமொரு காலத்தில் மலருறை மறையோனுலகின்கணுள்ள எல்லாத் தலங்களையு மொன்றாயும், இப்பாடலவன தலத்தைத் தனித்தொன்றாயும் தனது ஒப்புயர்வற்ற மதியாகிய துலாக்கோலிலேற்றிப் பார்க்கும்போது, இப்பாடல க்ஷேத்திரம் வைத்துள்ள பாகம் கனமிக்குற்று அழுந்தியதாம். ஆகவே, இத்தலத்தின் பெருமை பெரிதாம் விளங்குமன்றோ? தவிரவும், இச்சிறந்த க்ஷேத்திரத்திற் செய்யப்படுகின்ற புண்ணியஞ் சிறிதேயாயினும், அச்சிறிய புண்ணியத்தால் மிகப் பெரிய பலனையடையலா மென்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. எவரொருவர் இத்தலத்திலுறையும் (உறைதல்-வசித்தல்) வேதியர்களுக்கும், சிவவேடந் தாங்கிய சிவனடிச் சீலர்களுக்கும் உதவி புரிவார்களாயின், அது மற்றத் தலங்களிலுதவி செய்தாரெய்தும் பலனை விடப் பன்மடங்கு அதிக பலனையடைவாரென்பது திண்ணம்! திண்ணம்!!



இதல்லாமலும் இந்தப் பாடலத் தலத்தில் வதியும் பிராமணர்களுக்காவது, அல்லது சிவனடி மறவா சீலர்களுக்காவது யாரொருவர் துன்பஞ் செய்தாலும், அல்லது செய்ய நினைத்தாலும், அல்லது செய்யப் புகுவோர்க்கு உதவிபுரிந்தாலும் அப்பாதகமானது இப்பாடல வனத்திலுறைவோனல்லாது வேறு மூவுலகத்தாராலும் அப்பாதகத்தை நீக்கியருள முடியாதென்பதை யுதாரணமாக விளக்கிக் காட்டத்தக்க கதையொன்றுண்டு. அது அதிரகசியமானது. சிவபிரானது அனந்த கல்யாண குணங்களைப் பேசும் இதிகாசத்துள்ளது. அக்கதையைக் கேட்பாராவராயினும் அவர்கள் எத்தகைய துன்பங்களையுமடையாது இரு பேறடைவார்கள்" என்றதைக் கேட்ட பிரமசன்மனுக்குத் தூர்ச்சடி திருவாய் மலர்ந்தருளினர். அவருரைத்த வண்ணமே சொல்கிறேன் செவிகொடுத்துக் கேளுங்களென்று சூதமா முனிவர் சௌனகாதி முனிவர்களுக்குப் பின் வருமாறு சொல்லுவாராயினர்.

சௌனகாதி முனிவர்காள்! சுவர்க்க மத்திய பாதாளமென்னும் மூன்றுலகத்திலுள்ளாரெவர்களும் செய்த பாப

புண்ணியங்களுக்கேற்ப, அவரவர்களுக்குத் தக்க தண்டனை விதிக்க விளங்குபவனும், பலவளங்களும் நிறைந்ததாயுமுள்ள எமபுரிக்கரசனுந் தென்றிசைக் கோனுக்கு உலகத்துள்ளார் காலவரையைக் கணித்துக் கழறுபவனும் விளங்கும் சித்திரகுத்தன் என்னும் கணிதவல்லோன்! காலதூதர்களை யழைத்து "தூதர்காள்! பூலோகத்திலே, விந்தியமலைக்குத் தென்பாகத்திலே, தக்ஷிண பிநாகினி யென்னும் புண்ணிய நதிக்கருகிலே, பரம கருணாகரன் தேஜோமயமாய் விளங்கும் ஸ்ரீ பாடலக்ஷேத்திலே உள்ள பிரமசீலன் என்ற ஒருவனுக்கு இன்றோடு காலம் முடிவடைவதால், நீங்கள் விரைவிற் சென்று அவனை வருத்தாமற் பிடித்துக்கொண்டு வாருங்கள்!" என்றுகட்டளை யிட்டான்.

சித்திர குத்தன் சித்தமுவந்து தெரித்தது கேட்ட எமதூதர்கள், அக்கினிப் பொறியெழும் படியான சிவந்த கண்களையும், நீண்டு வளர்ந்து கோரமிகுந்த பற்களையும், கேட்பவர் திடுக்கிடும் படியாக வெழும் குரலோசையையும், பார்ப்பவரெவரும் பயந்து நடுங்கும்படியாயும், விகார சரீரத்தையுடையவர்களாயுந் தோன்றி, கரத்திற் சூலம், வாள், வேல், கோடரி, கதை, பாசக்கயிறு முதலிய வாயுதந் தாங்கியவர்களாய்ப் புறப்பட்டு திருப்பாடல க்ஷேத்திர மணுகினார்கள்.

சிவகரதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, நித்தியகர்மானுட்டானங்களை முடித்துக் கொண்டு ஔபாசனாதிகளைப் பூர்த்திசெய்து பலியன்ன மெடுத்துக் கொண்டு வந்த பிராமணனைக் (பிரமசீலன்) காலோடு கால் தட்டித் தடுமாறி கீழே விழும்படியாகச் செய்து, அது காரணமாக அப்பிரம



சீலனென்னும் பிராமணன் உயிரை சூக்ஷ்ம சரீரத்தோடு எமதூதர்கள் சித்திரகுத்தன் தங்கட்குக் குறிப்பித்த தவணை தவறிக் கொண்டு போயினர்.

பின்னர் அங்கு பலியன்னத்தை வழக்கம் போலிட்டு வர்வேண்டிய பிரமசீலர் வரத் தாமதப் பட்டமையின், அவர் வீட்டிலுள்ளார் வெளியில் விரைந்தோடி வந்துப் பார்க்கப் பிரமசீலன் பிரேதமாக விழுந்து கிடக்கிறதைக் கண்ட சுற்றத்தாரும், பிறரு மொருங்கு கூடிப் பிரேதத்தையுள்ளே எடுத்துக் கொண்டு போய்த் துயரமுற்று, அந்தோ! பலியன்னமிடப் போனவர் தன் வலிமையற்று மாண்டனரே! அந்தோ! என்னே! விதியின் மாண்பு! புண்ணிய மிகுந்த புனித உருவமே! ஈவு, இரக்கம், சிவகாருண்யம், உண்மை, பொறுமை முதலிய வருங் குணங்களெல்லா மொருங்கு சேர்ந்த பூசாத்தலைவ! விபூதி, உருத்திராக்க மாலையணிந்து விமலனை மறைவாறிறைஞ்சும் பாக்கியனே! நினக்கு விதியிருந்தவாறென்னே!" என்று பலப்பல பகர்ந்து பதறியழத் தொடங்கினார்கள்.

இஃதிங்ஙனமாக, எமபுரியடைந்த கால தூதர்கள் தாங்கள் கொண்டுவந்த பிரம சீலனைத் தருமராசன் முன்பாகக் கொண்டு போய் நிறுத்தினர். அவ்விதம் நிறுத்தப்பட்ட பிரமசீலனைக் கண்ணுற்ற தென்றிசைக்கோன் பயமிக்கோனாகி தான் ஏற்கனவே சிவபத்தர்களைச் சிதைத்து அனுபவித்த அபசாரக் குற்றங்களை யோர்ந்துப் பயந்துத் தூதர்களைக் கோபத்துடன் நோக்கி கன்னத்திலறைந்துச் சினமிகக் கொண்டான். அங்ஙனம் உணர்ந்து நின்ற

சிவநேயச் சீலரான பிரமசீலன் தென்றிசைக் கோனை நோக்கி, தருமராசரே!" யான் பூர்வசன்மத்திற் செய்த தவப்பயனாலல்லவோ இவண் வரலாயிற்று! ஏழையேனுறையும் பாடல வனத்திற் பதிந்திலங்கும் பரசுபாணியின் கருணாகடாட்சத்தால் காசினியிலுள்ள உயிரைக் கவரும் வன்மை பூண்ட தங்களைக் கண்டுதரிசிக்கும் பாக்கியம்பெற்றேனென்ற பிரம சீலனைப் பார்த்து நடுவன் பின்வருமாறுக் கூறினன்.

"பாடலவனத்துறையும் பரமனைப் பணிந்தேத்தும் பூசுரத் தலைவ! நின்னைக் கண்டதால் நின்பதியுறையும் நிமலனைக்கண்டப் பெரும் பேறடைந்தேன்! யானைக்கும் அடிசறுக்கும் என்றவாறு நாங்கள் தெரியாதிழைத்தப் பெரும் பிழை பொறுத்திரக்கங் காட்டவேண்டுமென்றும், சிறியோராகிய நாங்கள் தங்கட்குச் சிரமங் கொடுத்ததைப் பற்றிச் சினங் கொள்ளலாகா தென்றுப் பல நன்மொழிபகர்ந்தும், நீர் மீண்டும் பாடலவனம் (திருப்பாதிரிப்புலியூர்) புக்கித் திரிலோக காரணனாகிய திரிபுராந்தகனைத் தொழுது கொண்டும், நின்னை யடைந்த அதிதிகட்கு அன்னமிட்டுக்கொண்டும் இன்னுஞ் சின்னாள் பூலோகத்துறைந்து பின் சிவசாயுச்சிய பதவியடைவீராகுக! என்றான்.

அவ்விதம் மறைந்த அந்தகனை பிரமசீலன் விளித்து, "ஓ! *தருமநந்தா! இக்குற்ற நான் உமது பட்டினத்திலுள்ள விநோத சம்பவங்களைப் பார்க்கப் பேரவாக் கொண்டுளேனாதலால், அதற்கு அருள்புரிய வேண்டுமென்ற பிரம

* தருமநந்தா—கெடாத தருமத்தை கைக்கொண்டோன் என்ப. (நந்தா—கெடாத)



சீலனை காலன் நோக்கி சிவாநுபூதிச் சீலரே! தாங்களிவண் வந்து வெகு நேரமாகிவிட்டது. ஆகையால் தாங்கள் காலங் கடத்தாது சீக்கிரமாகத் தங்களிருப்பிடத்திற்குச் செல்லல் வேண்டும். இல்லையேல் தங்களுறவினர்கள் தங்கள் சரீரத்தைத் தகனஞ்செய்து விடுவார்கள். அவ்விதம் செய்து விட்டால் நாங்களறியாதிழைத்தக் குற்றத்திற்குள்ளாக வேண்டும். ஆகலால், தாங்கள் விரும்பியவாறு சீக்கிரமாகப் பார்த்துவிட்டுச் செல்லுமென்றுரைத்து, தூதர்களை நோக்கி பிரம சீலருக்கு எமபுரி முழுதும் அதிசீக்கிரம் காண்பிக்குமாறு கட்டளையிட்டனன்.

காலன் கட்டளையின்படியே எமதூதர்களும் பிரமசீலனுக்கு எமபுரியைக் காண்பித்துக் கடைசியாக நரக பூமியையுங் காண்பிக்குங் காலத்து, ஆங்குள்ளாரனைவரும் தாங்கள் செய்த பாபத்துக் கீடாகப் பதிந் தனுபவித்துப் பரதவிக்கும் வருத்தத்தைக் கண்ட பிரமசீலன் எமதூதர்களை நோக்கி, "ஏன் இவர்கள் இவ்விதம் பரதவித்து வருத்த முறுகின்றார்கள்?" எனலும், அதற்கவர்கள் புண்ணியம் பழுத்த புனித சீலரே! "இது வேதத்தில் விளக்கக்கூறிய நரகபூமி! இப்பூமியில் வசிப்பவர்கள் கொலை, களவு, கள், காமம், சூது முதலிய பஞ்சமா குற்றங்களைச் செய்தோர்களும், பெரியோர்களைப் பழித்தல், பெற்றோர்களை வருத்தல், நம்பினோரைக் கைவிடல், கணவனை விட்டுப் பிறனைக் காதலித்து இன்பமனுபவித்தல், பிறன் மனைபுகுதல், குடும்பத்தைக் கெடுத்தல், குருவை நிந்தித்தல், குருமனைவியை யனுபவித்தல், தெய்வங்களைத் தூஷித்தல், சிவனடியார்களைச் சினந் துரைத்தல், தஞ்சமென்றோர்களைக் காட்டிக் கொடுத்தல், வேந்தரை

வெறுத்துரைத்தல், உணவைக் கெடுத்தல் முதலிய வடாத செய்கைகளைச் செய்தவர்களைத் தண்டிப்பான் வேண்டி, அத்தகைய கொடும் பாதகங்களைச் செய்தவர்களைச் செக்கிலிட்டரைத்தல், சேதித்தல், தீயிடைத் தள்ளிக் காய்த்தல், எரியெண்ணெய்க் கொப்பரையி லாழ்த்தல், கோடரி கொண்டு கொடுஞ்சிரசைப் பிளத்தல், ஈட்டியிற் குத்தி யனலில் வாட்டுதல். சீரிய சர்ப்பம் நிறைந்த வகழியிற் றள்ளல் முதலிய தண்டனைகளைச் செய்து தருமத்தை நிலை நிறுத்தும் எங்களிறைவனும் தருமராசனின் கட்டளையைப் புறக்கணியாது சிரங்கொண்டு செய்யத்தக்க விடமா மிது. இவ்விடத்தைத் தங்களைப்போன்ற சற்குணமிகுந்த நல்லவர்கள் பார்க்கத் தகுந்த தன்று" என்றுரைத்ததைக் கேட்ட பிரமசிலன் மனந் திடுக்கிட்டு, "ஆகா! பாபச் செயலின் பலனென்னே! என்னே!! பாவமியற்றல் கொடுஞ் செய்கை யென்பதை இக்குற்றோர் மீண்டும் பாபஞ் செய்யத் துணிவரோ! பாபஞ் செய்தார் படுந்துன்பம் பார்க்கச் சகிக்குமோ!" என்று சிவனைச் சிந்தியிலேத்தித் தியானஞ் செய்தனர்.

அவ்விதம் அமலனை யிறைஞ்சி வழுத்தியது கேட்ட நரக பூமியிலுள்ளக் கொடும் பாபிகள் தங்கள் வேதனை விலகியோட கருணாகர மூர்த்தியே தங்கள்பாற் கருணை பாலித்து வந்ததொப்ப விளங்கி நின்ற பிரமசிலனை யடைந்து அட்டாங்கமுறப் பணிந்தெழுந்து கைகட்டி வாய்பொத்தி, "சாற்றற்கரிய துன்பத்தி லாழ்ந்தித் தளருறு மெங்கட்குத் தங்கள் தரிசனம் கிடைத்தது பெரும் பாக்கியமே யாகும்! தங்கள் தரிசனப் பேற்றால் நாங்கள் துன்பக்கடலினின்றுங் கரையேறப் பெற்றோம்! தருணத்தி லுதவிபுரியவந்தத் தயாநிதியே! மண்ணுலகிற் பொய்யா முடலெடுத்துச் செய்யத் தகாத கொடும் பாபங்களைச் செய்து, அங்ஙனஞ் செய்த பாபங்களுக் கீடாக கொடுநிலமாகிய இந் நரகபூமியில் வருந்தித் தவிக்கும் எங்கள்பாற் கருணை காட்டி எங்களை வாழ்விக்கவந்த எந்தையே! தாங்களே எங்களுக் குதவிபுரிந்த பெருநிதி யாவீர்கள்!" என்று பலவாறு பணிந்து பகர்ந்து நின்றார்கள்.



அவ்விதம் பணிவுறுங் காலத்தும் பிரமசிலர் பாடலீசுரனை மறவாது மனத்திருத்தி சதாசிவன் சத நாமங்களை யுச்சரிக்கவே, நரக பூமியில் பொருந்தியவர்களிற் பஞ்சமா பாதகத்தோடுங் கூடிய ஐவர் ஒழிய மற்றவர்களெல்லாம் அக்கினியிற்பட்ட பஞ்சுபோல் தங்கள் பாபங்களெல்லா மகன்று, திவ்விய சரீரத்தைப் பெற்று, தேவ விமானங்களி லேறிச் சிவலோகத்தை யடைந்தார்கள்.

மேற் கூறப்பட்டபடி பஞ்சமகா பாதகத்தோடுங்கூடிய ஐவர் எரிகின்ற எண்ணெய்க் கொப்பரையிற் கிடந்து வருந்துமவர்களை விடுவிப்பான் வேண்டி யனந்தமுறை சிவமகா மந்திரங்களைச் சொல்லிய பிரமசிலர் அவர்களின் துன்ப மகலாதிருப்பதைக் கண்டு மனம் சகியாதவராய் காலதூதர்களுடன் தருமராசனும், சித்திரகுத்தனும் வீற்றிருக்கும் மணிமண்டபத்தைச் சார்ந்தார்.

அங்ஙனம், எமதூதர்கள் தங்க ளிறைவனடி வணங்கி, "எம்மையனே! தங்க ளுத்திரவின்படியே பிரமசிலருக்கு நமது பட்டினத்தைக் காண்பித்து, இறுதியாக நரகபூமியிற் செல்லும்போது ஆங்குள்ளார்களில் ஐவர் நீங்கலாக மற்றையோ ரெவர்களும் பிரமசிலருச்சரித்த சிவநாமங்களைக்

கேட்டமாத்திரத்தில் திவ்விய சரீரம்பெற்று நரகபூமியினின்றும் வெளியேறி சிவலோகம் போய்ச் சேர்ந்தார்கள். எஞ்சியிருந்து வருந்தும் ஐவரையுஞ் சிவலோகத்திற் கனுப்பவேண்டுமென்றவராய் மீண்டும் தங்கள்பால் வந்திருக்கின்றார்” என்றியம்பினார்கள்.

இவற்றைக் கேட்ட எருமையூர்தியோன் இன்பமடைந்து, பினாகபாணியின் பெருமையைப் பேசும் பெற்றியடைந்த பிரமசீலரே! நான் முன்னுரைத்தபடி நீர் இவண் தாமதித்து பாதகர்களைக் காப்பாற்ற நினைப்பீராயின், பூலோகத்தில் உமது பந்து மித்திரர்கள் உமக்குற்ற சரீரத்தை *ஈமத்திற் கொண்டுபோய் க்ஷேமமா யெரித்துவிடுவார்கள். ஆகையால் நீர் பூலோகத்திற் சிவலோகமாக விளங்கும் பாதிரிப்புலியூரடைந்து மீண்டும் நாளையத்தினம் உமது ஸ்தூல சரீரத்தோடு இங்கு வருவீராக. அவ்விதம் ஸ்தூல சரீரத்தோடு மீண்டு மிங்கடையும்படியான வரத்தைத் தந்திருக்கிறோமென்ற நடுவன் அடிவணங்கிப் பாடலவனத்தினுள்ள தன் சரீரக் கூட்டில் பிரவேசித்துத் துயிலினின்றெழுந்தார்போன்றெழுந்த பிரமசீலரைக் கண்டா ரெவரும் களிப்புற்றார்கள்.

பிரமசீலர் மறுநாட் காலையில் சிவகர தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சிவபூசையாதிய கருமானுட்டானங்களை முடித்துக்கொண்டு, அங்குள்ளா ரனைவர்களுக்கும் தான் எமபுரிக்குச் சென்று வந்ததைப்பற்றி ஆதியோடந்தமாகச் சொல்லிப் பின்னர் திருக்கோயிலடைந்து, பிரணவப் பொருளாம் விநாயகராதிய தேவர்களை முறைப்படி வணங்கி, இல்லம்புக்கி,

* ஈமம்—சுடுகாடு.



போஜனஞ் செய்து, தனக்குத் தருமராசன் தந்த வரத்தின்படியே ஸ்தூல சரீரத்தோடு யமபுரியடைந்து, தருமராஜனுடன் எரியெண்ணையிற் கிடந்து வருந்தும் ஐவரிடமனுகி எத்தகைய பாபத்தையும் எளிதில் போக்கி எல்லையற்ற வின்பத்தை யளிப்பான்வேண்டி சதாசிவன் சதநாமங்களை பன்முறையு மோதுவாராயினர். பிரமசீலர் எவ்வளவு பாடுபட்டும் பாதகர்கள் பாபம் நீங்கப்பெறாத காரணம் யாது என்று எமபுரத்தரசனை வினவினர்.

அங்ஙனம், தருமராசனும் இவ்வதிசயத்தை யானறியேன். ஆதலால், சிருட்டி கர்த்தாவான பிரமதேவனைக் கேட்டறியலாம் வாருமென்று இருவரும் சத்தியலோகமடைந்து சதுர்முகக் கடவுளை வணங்கி நின்றார்கள்.

வாணிகேள்வன் தன்னை வந்து பணிந்த விருவருக்கும் முகமன்கூறி நல்வரவேற் றுபசரித்து நடுவனால் பிரமசீலரின் சரிதமும் பெருமையு முணர்ந்து *பண்ணவ ரெவரும் பணிந்தேத்தும் பரமன் பதிந்த பாடலவனத்துறை பண்பிற் சிறந்தோய்! “ஈண்டு உம்மைக் காணப்பெற்றதால் அப் பாடலவனத்துறை பரமனைப் பார்த்த பலனைப் பெற்றேன் என்று பலவாறு புகழ்ந்து கூறிவிட்டு, பிரமசீலரே ! நரகிற் கிடந்து வருந்துபவர்களின் பழமையை யானுணரேன்! நானித்தொழிலுக்கு வருமுன்னரே யவர்கள் நரகத்திலிருந்து வருவதாகத் தெரிகிறது. ஆகலான், அவர்களது விருத்தாந்தங்களை யறியவேண்டுமானால் அருட்பெருஞ் சோதியாம் ஆலமர்க் கடவுளாலன்றி மற்றையோரால் வழுத்தற் கரிதாகும். ஆகவே, நாம் கைலையம்பதிக்

* பண்ணவர்—முனிவர்.

ருச் சென்றுக் கங்கைவேணியன்பால் தெரிந்துகொள்ளலா மெனவும், அவ்விதமே திசைமுகக் கடவுளுடன் தென் றிசைக்கோனும், பிரமசீலனும் ஒருங்கு சேர்ந்து மூவருமாக கைலையண்மி, கைலை காவலனும் நந்தியெம்பெருமான் கழலடி வணங்கி நின்றனர். அங்ஙனம், உபய சம்புவாம் திருநந்தி தேவர் தன்முன் வந்து வணங்கிய மூவருள் பிரமசீலனைப் பார்த்து, அன்ப! புண்ணியம் பழுத்தப் புலிசையம்பதியில் வசிக்கும் புனிதமிக்கப் பத்தர்களைப் பார்த்தல் பண்ணவர் களைப் பார்த்தல் போலாம். ஆகவே, அப்பாடலம் பதியிற் பதிந்த பக்தனான உம்மைக் காணும் பாக்கியமடைந்ததற்கு மிகவும் மகிழ்வுறுகின்றேம்.

தாங்களீண்டுத் தெரிந்துகொள்வான் விழைந்து வந்த விடயம் பற்றிச் சிறிது சொல்வாம். நரகிடை கிடந்துழலு மப்பாபிகளைவரும் மகாபாதகர்கள். அவ்வைவருளொருவன் புலியூரி (திருப்பாதிரிப்புலியூர்) லுள்ள பிராமணரைத் தூஷித் தவன். மற்றொருவன் அப்பதியிலுறை பிராமணர்களுக்கு வரும் வருமான (ஊதியம்) த்தைக் கெடுத்தவன். இன்னு மொருவன் அப்பிராமணர்களின் பொருளை யபகரித்தவன். வேறொருவன் பஞ்சகிருத்திய மியற்றிப் பாரெலாம் விளங்கச் செய்யும் அந்திவண்ணன் பொருளை மிக்கப் பிரீதியோடு அபகரித்தவன். மற்றொருவனே எல்லாம் வல்ல இறைவ னும் பகவனை* யெள்ளியுரைத்த நாஸ்திகன். ஆகவே, இத் தகைய கொடுஞ் செய்கைகளை யுடைய வவ்வைவரையும் நரக பூமியினின்று மகற்ற வேண்டுமானால் ஆலமர்க் கடவுளா லன்றி மற்றையோரால் முடியாது. அக் கொடும் பாதகர்கள்

* எள்ளி—நகைத்து, அல்லது நிந்தித்து என்ப.



அநேக கோடி காலங்களாக நரகிடையிருந்து வருந்துகின்ற னர்" என்றியம்பிகொண்டிருக்குங் காலத்து தேவர்களெவர் களுந் தன்னைச் சூழ்ந்துவரவும், தேவ வாத்திய மொலிக்கவும், சோதி சொரூபமாய் விளங்கா நின்ற எம்பெருமான் வெள் விடையி லாரோகணித் தாங்கெழுந்தருளுவா ராயினர்.

ஐயன் வரலைக்கண்ட $ இரணிய கருப்பன் முதலான வர்கள் எழுந்து மங்கையோர் பாகன் மலரடி வணங்கி வாய் பொத்திக் கரஞ்சிரமேற் கூப்பிப் பணிவுற்றதைப் பார்த்த பகவன் † வேத்திரப்படையானை விளித்து. 'பிரமசீலனை யாரென்று' வினவினர்.

அவ்விதம் வினவிய அகில காரணனுக்குத் திரு நந்தி தேவர் "இவன் புலிசையம் பதியில் பூர்வ புண்ணியப்பெற் றால் பூசா குலத்திற் பிறந்து, அப்பாடலவனத்திலுள்ள பரம கருணாநிதியாம் பாடலீசுரனை மெய்யன்புடன் செய்பணி யாவும் வழுவாதியற்றி வணங்கும் பேரறிவு வாய்ந்த பிரம சீலன் எனப் பகரப் பெறுவான். இத்தகைய வுத்தம சீலனை கூற்றுவன் தூதர்கள் தவறாக தருமராசன் பதிக்குக் கொண்டு வரவே, அது போழ்து மறலி தன் தூதர்களைக் காய்ந்து இவ் வுத்தமோத்தமனை இப்பொழுதே இவனுறை யிரும்பதி யெய்த வேண்டுமென்றுக் கட்டளை யிட்டனன்.

அது சமயம், இப் பிரமசீலன் வைவச்சுதன் மலரடி பணிந்து, எமபுரியையும், ஆங்குள்ள வதிசய விநோதங்களை யும் பார்க்க விழைவுற் றிறைஞ்சினன். அதற்குப் பாசனு மிசைந்து தன் தூதர்களைக் கொண்டு பிரம சீலன் பிரியப்படி

$ இரணியகருப்பன்—பிரமா. † வேத்திரப் படையான்—நந்தியெம்பெருமான்.

தன் பட்டினத்தைக் காண்பித்து அதி சீக்கிரம் அவனிருப்பி
டம் கொண்டு விடுங்களென்றான்.

இயமன் இயம்பியவாறே காலதூதர்கள் பிரம சீல
னுக்கு எமபுரியெங்குங் காண்பித்து, இறுதியாக நகரபூமியை
யுங் காண்பித்து வரும்போது, அந்நரக பூமியிலுள்ளார் தாங்
கள் செய்த பாபங்கட்கீடாக வனுபவித்து வருந்தும் கொடுந்
துன்பங்களைக் கண்ணுற்ற விப்பிரம சீலன், தன்னரும்பதியிற்
றங்கி யோங்கும் மங்கை பாகனும் பாடலீசுரனைப் பத்தியோ
டேத்திப் பன்முறை பகவன் நாமங்களைப் பகரவே, சிவ
நாமத்தைக் கேட்ட மாத்திரத்தில் நகரத்திலுழலும் பாதகர்
கள் ஐவர் நீங்கலாக மற்றையோர் யாவரும் தங்கள் பாவம
கலப்பெற்று சிவாநுபூதிச் சீலராய்த் தேவசரீரம் எடுத்துச்
சிவலோகஞ் சேர்ந்தார்கள். சென்றவர்கள் போக எஞ்சி
நின்ற ஐவர்களும் அநேககோடி காலங்களாக நரகிலுழன்று
அவதியுறு மவர்கள் மாத்திரம் பிரம சீலன் எவ்வளவும் சிவ
நாமங்களை யுச்சரித்தும் அக்கொடும் பாபிகள் எண்ணைக்
கொப்பரையினின்று நீங்காது பரதவிக்கும் காரணமாக
வேண்டிய விஷயம் விளங்காமல் கூற்றுவனும், பிரமசீலனும்
கூடி அயனிட மடைய, * அயனும் அதுகாரண மறியே
னென்றுத் தானும் அவ்விருவர்களுடன் சேர்ந்து தற்பரனா
கிய நந்தியிட மடைந்து தெரிந்து போக வந்திருக்கின்றனர்
என்று நந்தியம் பெருமான் நாதனும் கைலைவாசனிடங் கூற,
அதுபோது அகிலகாரணனான வாதியங்கடவுள் புன்சிரிப்
புடனே, பிரமசீலனை நோக்கி, "நாம் நமது அநந்தகலைக
ளுடனே கைலாசத்தைவிட மிகச் சிறப்புடன் விளங்க

* அயன்—பிரமா.



வீற்றிருக்கும் திருப்பாடலிபுரத்தில் சிறந்த * விப்பிரர்
குலத்திற் பிறந்து எம்மைத் திரிகாலங்களிலுந்திரிகரண சுத்தி
யோடு தரிசிக்கும் பத்தனானபடியால் உன்னையும் என்பால்
அன்புள்ள பத்தர்களிலொருவனாக வெண்ணினேன். ஆக
லான், நீ கருதிய பரோபகாரத்தைச் செய்து முடித்தற்கு ஒரு
வழியுண்டு. அதை நினக்குத் தெரிவிப்பாம். நீ நின்பதி
யாகிய புலிசையடைந்து, அங்கு நம்மாற் றோற்றுவிக்கப் பட்
டதும், அதிபாபங்களை யகற்றத் தக்கதுமாகப் புனிதமிக்
கோங்கும் சிவகர தீர்த்தத்தைப் பரிசுத்தனாயிருந்து பரிசுத்த
மான ஓர் $ கடத்திலெடுத்து, அத்தீர்த்தத்தோடுகூடிய கடத்
தில் நம்மையும், நமதருட்சத்தியாகிய வம்பிகையையு மாவா
ஹனஞ் செய்து, பிறகு உருத்திர மகாமந்திரத்தை யுச்சரித்து,
அத் தீர்த்தத்தை யக்கொடும் பாபிகள்மேற் றெளிப்பாயே
யானால், அப்புண்ணிய தீர்த்தம் அவர்கள்மேல் பட்டமாத்தி
ரத்திலேயே அவர்களிழைத்த வநீதிகளெல்லா மகன்று மகா
பரிசுத்தர்களாகி நம்முலகத்தையடைவார்கள் என்றுரைத்து;
நீயும் பரோபகார சிந்தையோடு பத்தனாயும் விளங்கி முடிவில்
நம் பதத்தையடையக் கடவாயாகுக!'' என்று திருவாய்
மலர்ந்தருளினன் திரிபுரதகனன்.

உடனே பிரமசீலன் நந்தியெம் பெருமான், மலருறை
யிறைவன், தென்றிசைத் தேவன் முதலியவர்களிடம் வணக்
கம் கூறி, விடைபெற்றுப் புலியூர் புக்கி, வேத முணர்ந்த
வேதியரோடு சிவகர தீர்த்தத் † தானமடைந்து, அச்சிவ

* விப்பிரர்—பிராமணர். $ கடம்—குடம்.

† தானம்—இடம். இது 'ஸ்தானம்' என்னும் வடமொழிச் சொல். 'ஸ்' கெட 'தானம்' எனத் தமிழ்மொழியாளர் தழுவுவர்.

தீர்த்தத்தைக் குற்றமற்ற வோர் † கும்பத்தி லடைத்து, அதில் தோன்றாத் துணைவராஞ் சூலபாணியையும், தோகையம்பிகை யம்மையாந் தேவியையு மாவாஹனஞ் செய்து, உருத்திரமகா மந்திரத்தை யுச்சரித்து, விமலனை வழிபடும் வேதியர்களுக்கெல்லாம் அறமியற்றி, ஆவாஹனஞ் செய்துள்ள குடத்தை யெடுத்துக்கொண்டு, தான் முன்னமே இயமராசனிடம் பெற்றிருந்த வரத்தின்படி யியமனுலகடைந்து அநேக காலங்களாக எண்ணெய்க் கொப்பரையிற் கிடந்துழன்று வருந்தும் ஐவர் மேலும் படும்படியாகப் பிரமசீலன் தான் கொண்டுவந்த தீர்த்தத்தைத் தெளிக்கவே, அவ்வைவர்களும் தங்கள் தங்கள் பாபங்களெல்லாம் அக்கினியிற் பட்ட பஞ்சுபோலாக, திவ்விய தேவ சரீரம் பெற்றுச் சிவலோகஞ் சென்றார்கள்.

அதுபோழ்து அரனருளா லாகாயத்தி லெழுந்த அசரீரியாவது "பிரமசீலனே! தோன்றாத் துணைவராற் றோற்றுவிக்கப்பட்ட சிவகரதீர்த்தத்தின் சிறப்புபோன்று உலகில் வேறு தீர்த்தங்களுக்கு அமைய வில்லை. அவ்வளவு சிறப்பு வாய்ந்த வத்தீர்த்தத்தைக் கண்டார்க்கும், கண்டு ஸ்நானஞ் செய்தார்க்கும், உண்டார்க்கும், புரோக்ஷித்துக் கொண்டார்க்கு முண்டாகும் புண்ணியப் பேற்றை யுரைக்கிற் பெருகும். அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்த தேவர்களநேகர் தங்களிஷ்ட சித்திகளைப் பெற்றுய்தார்கள்" என்று *ஒலித்த வாக்கியங்கேட்டு அனைவரும் ஆநந்தமுற்றுச் சென்றார்கள்.

† கும்பம்—குடம்.

* ஒலித்த—சப்தித்த.



அதன் பின்னர் பிரமசீலனும் தருமசீலனிடம் விடைபெற்றுத் திருப்பாதிரிப்புலியூர் புக்கி, நாடோறு நலமிகுந்த சிவகர தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, பாடல நாதனைப் பத்தியோ டேத்திப் பணிந்து வாழ்ந்திருந்து, முடிவி லழிவிலா முதல்வனது பதவியைப் பெற்றான். அத்துணைச் சிறப்பு வாய்ந்த சிவகர தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து கங்கா தேவியும், அக்கினி பகவானும் தாங்கள் தவறிழைத்தப் பாபம் நீங்க முத்தி யடைந்தார்கள் என்றுரைத்த குருவினடி வணங்கிய பிரமசன்மன் மீண்டும், "குருநாத! முப்புவனத்திலும் ஒப்புயர்வற்று விளங்கி எவர்களது பாபங்களையும் எளிதற் போக்க வல்ல சத்திவாய்ந்த கங்காதேவிக்குவந்த தோஷமும், (தோஷமும்—குற்றம்) அத்தோஷம் அகல சிவகரதீர்த்தில் ஸ்நானஞ் செய்ய நேர்ந்ததையும், பாவங்களை யகற்றும் வல்லமை வாய்ந்த சிவகர தீர்த்த முண்டான விவரத்தையும் அடியேனுக்கு விளங்க விளம்ப வேண்டுமென்று வினவினன் என்று சூத புராணிகர் சௌனகாதி முனிவர்கட்குக் கூறவே அங்ஙனம், சௌனகாதி முனிவர்கள் அத்தீர்த்த விசேடத்தை யடியேங்களுக்கு அருள் சுரந்தருளல் வேண்டுமென் றிறைஞ்சினர்.

தலவிசேடச் சருக்கம்

முற்றிற்று.

170851
சென்னை 600 008.

## 6. தீர்த்த விசேடச் சருக்கம்

சைவநற் சமய மோங்கத் தழங்கிய பெரியா ருள்கி
கைவகற் றலத்தி லார்ந்த நயம்படி மணிவாக் கற்கே
பைவதி யரவப் பூண்கொள் பசுபதிக் கருணை வைத்தங்
கைவரத் தீர்த்தம் மூலங் கதிர்ந்திட தலஞ்செய் திட்டான்.

வேதமுணர்ந்த சூதமாமுனிவர் சௌனகாதி முனிவர்களை நோக்கி, "மோனத்துற்றஞான சீலர்காள்! உமாமகேசுரன் ஒருகாலத்தில் தாருகாவன விருடிகளை யாட்கொண்டருளுவான் வேண்டி எண்ணற்ற எல்லை மார்த்தாண்டனெழுந்தாற் போன்ற பிரகாசத்தையும், தன்னைக் கண்டாரெவருங் கருத்தழிந்து மயங்கி விரும்பும்படியான பாலவடிவத்தையும், தங்கத்திரு மேனியெங்கும் திரிபுண்டர தாரணத்தையும், முறையே அணியத்தக்க விடங்களி லுருத்திராக்கமாலைகளை யணிந்தும், கரத்திற் பிரம்பும், மாத்திரைக்கோலும், படிகமாலையும், விபூதிப்பையும், யோகசாதனக் கருவிகளும் கொண்டுப் பாதச்சிலம்பொலிக்கத் திருவீதியிலெழுந்தருளித் தன்னைநினைப்பார் பிறவிப் பிணியைத் தீர்த்திடுமாறு ஓர் திருவிளையாடல் செய்யத் தொடங்கினர்.

அவ்விதம் தோன்றிய வகிலகாரணன் மக்களெவர்களும் முன் ஜென்மத் தீவினைபாலடையப்பெற்ற கூன், குருடு, செவிடு, மூடம் முதலியவைகளை யகற்றியும், அன்பர்களபீஷ்டங்களை நிறைவேற்றியும், மலடிகளுக்கு மக்கட்பேற்றை யருளியும், பெரியதைச் சிறியதாயும், சிறியதைப் பெரியதாயும், ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை யாணாக



வும் செய்து யாவரும் அதிசயிக்கத்தக்க விநோதத் திருவிளையாடற் காலையில், முன்னமேயே திருப்பெருந்துறையில் மங்கை பாகனாற் றடுத்தாட்கொள்ளப்பட்ட மாணிக்கவாசகப் பெருமான் என்ற வாதவூரடிகள் திருச்சிற்றம்பலமென்னும் சிதம்பரத்தில் ஆனந்தத் தாண்டவ மூர்த்தியைத் தரிசித்துப் பின் திருப்பாதிரிப்புலியூர் க்ஷேத்திரத்தே விளங்கும் எல்லாம் வல்ல விறைவனைப் பணிவான் விரும்பி வந்தனர். வாதவூரடிகள் வரும் வழியில் வழிமறித்து வோடும் கெடில நதியானது இருகரையு மொன்றாய்ப் பெருகிய வெள்ளத்தோடிருப்பதைக் கண்ட வாதவூரடிகள் மிக்க மனக்கிலேசமுற்று நாம் எண்ணிவந்தவாறு பாடலிநாதனைக் காணவியலாதது இறைவன்றிருவுளச் செயலே போலு மென்றெண்ணி மனமுருகி யூனுறக்க மில்லாது உமையொரு பாகனை யுள்ளத் தேற்றி யக்கெடிலநதியின் கரையிலேயே மூன்று தினங்களாகத் தாமதித்திருக்கும் மாணிக்கவாசகரைத் திருப்தி செய்வா னுவந்து பத்தர்க் கன்பனான பாடலீசுரன் பரந்த சித்த ரூப மேனியுடன் கெடில நதியின் றென் பாலடைந்து அங்ஙனம் தியங்கிய மனத்துடன் திரிலோகேசனைத் தியானித்துக் கொண்டிருக்கும் வாதவூரடிகள் முன் றோன்றினர்.

அவ்விதம் தோன்றிய தோன்றாத்துணைவரைக் கண்ட மணிவாசகப் பெருமான் நிலமுறச் சாட்டாங்கமாகப் பணிந்தெழுந்து "எளியேனை யாட்கொள்ள வந்த எல்லாம் வல்ல விறைவனே! அடியேன் இந்நதியைக் கடந்து, பாடலமடைந்து, பாடலீசுரனைப் பணிந்துத் துதிக்க, என்வினையுருக் கொண்டு வழிமறிப்ப தொப்ப விந்நதியிலோடும் வெள்ளப்

பெருக்கால் மூன்று தினங்களாக இவண் தாமதித்துள்ளேன்.
ஆகவே, அகில காரணனடி பணியுமாறுத் தாங்களே இவ்
விடையூறகற்றி யடியேன் பேரவாவைப் பூர்த்தி செய்து
வைத்தல் வேண்டும்!" என்று தாளிற் பணிந்திறைஞ்சுவா
ராயினர்.

அங்ஙனம் தன்னடிமலரேத்திப் பணிந்த மாணிக்கவாச
ரின் மனத்தெழுந்த உண்மையை யுணரும் ஒள்ளிய உமாதி
யான சித்தேசன் வாதவூரடிகளைப் பார்த்து, "அன்பனே!
நான் எல்லாம் வல்ல விறைவனைப் போலெல்லையு மியற்ற விய
லாது. இருப்பினும் நீர் என்னுடன் வாருமென்றுரைத்துத்
தான் முன்னே நதியிலிறங்கிச் செல்லலாயினர். அது
போழ்து மாணிக்கவாசகசுவாமிகள் வெள்ளப் பிரவாகத்தை
யுடைய நதியிலிறங்கப் பயமிகக்கொண்டு கரையிலேயே நின்
றனர். அது கண்ட * அன்புவடிவினுருவ ஆலமர்க் கடவுள்
வாதவூரடிகளை விளித்து, ஏன் கரையிலேயே நிற்கின்றீர்! இவ்
வெள்ளத்திலிறங்கிவரப் பயப்படுகின்றீர் போலும்! உமக்கு
இடையூறாகவுள்ள இந்நதியை இவ்வூருக்கு வடபாற்சென்றோ
டும்படிச் செய்துவிடுகிறேன் என்றுரைத்துத் தனது திருக்கரத்
திருந்த † வேத்திரத்தால் கெடிலநதியைப் படாலவனத்தின்
வடபால் வரக் கட்டளையிடுவதுபோற் காட்டவே, உடனே
அந்நதியும் வடக்குநோக்கித் திரும்பிப் பின் கிழக்கு முகமாக

* அன்பு வடிவினன் என்றது சிவபெருமானை. இதைத் திரு
மந்திரத்திற் றெள்ளத் தெளியத் தெரிக்கக் தெரியலாம். அது பற்றி
அன்பின்பெருமை என்று வேறு தனிப்புத்தகமாக வெளியிடவுத்தே
சிக்கப் பட்டிருக்கிறது.

† வேத்திரம்-பிரம்பு.



வோடி பிரமதீர்த்தமாகிய சமுத்திரத்திற் கலந்தது. அக்கார
ணம் நிகழ்ந்த அற்புதம் கண்ட மாணிக்கவாசகர் ஆனந்த
முற்று, உடனே பாடலமணுகிப் பாடலீசுரனைத் தொழு
திறைஞ்சிப் பரமானந்தப் பரவசராயிருக்கக் கண்ட முனிவர்
கள் பலராலும் உபரிசக்க மனமகிழ்ந்த வாதவூரடிகள் அன்
றிரவை நன்றிரவாகக் கழித்து, மறுநாள் வாதவூரடிகள்
பாடலவனத்தைப் பத்தி சிரத்தையோடு வலம் வந்துத் திரு
வருளைத் தியானிக்கத் தீர்த்த நிலையைக் காணாதபடியால்
தோன்றாத் துணைவரைச் சிந்தித்தார்.

அவ்விதம் சிந்தித்த மாத்திரத்தில் பாடலீசுரன் தனது
எண்ணத்தை யீடேற்றி வைக்க வெண்ணித் தமது தமனியக்
கரத்தால் பூமியைத் தொடவே, அங்ஙனம் அப்பொழுதே
அமிர்தத்தினு மினியதாயும், தன்னைத் தொட்டவர்களது
பாபங்களை யகற்றத் தக்கதாயும், என்றும் வற்றாத ஆழத்தை
யுடையதாயுமான ஓர் நீர் நிலைதோன்றிற்று. உடனே கங்
கையைச் செஞ்சடையிற்றரித்த * கண்ணுதற் கடவுள் தன்
சடையிலுள்ள கங்கையைத் தெளித்து, மற்றுமுண்டான
தீர்த்தங்களையு முண்டுபண்ணிக் காண்பித்து இன்னும் யாது
விழைவுற்றீர்? விரும்பியதைக் கேளுமென்றார்.

அதுபோழ்து வேதியர் குலத்தோன்றலாம் வாத
வூரடிகள் மிக்கவானந்தங் கொண்டாராய், "சுவாமி! வன
மடர்ந்த இப்பூமியை நாடாகச் செய்யவேண்டுமென்று வேண்
டினர். உடனே அங்குள்ளாரனைவரையும் கண்களை மூடிக்

* கண்ணுதற் கடவுள் என்றது-கண்-நேத்திரம், நுதல்-
நெற்றி, கடவுள்-தெய்வம். யீண்டு நெற்றியிற் கண்ணையுடையோன்
எனப்பொருள் பயவாநிற்கும்.

கொள்ளும்படிச் செய்துவிட்டு உடனே வானளாவிய மாட மாளிகைகளையும், கூட கோபுரங்களையு முண்டுபண்ணியும், திருவமைந்த வீதிகளை யவரவர்கள் வர்ணாசிரமங்கட்கேற்ற வாறமைத்துத் தான் நகர மத்தியிற் றிருக்கோயிற் கொண் டெழுந்தருளுவ தொப்பப் பாதிரி மூலத்திற் போய் மறைந் தார். பிறகு வாதவூரார் முதலியவர்கள் மூடியகண் திறந்துப் பார்த்தார்கள். பார்த்தபோது பாடலவனமானது அநேக மாடமாளிகை கூட கோபுரங்களையும், அழகமைந்த திருவீதி களையுங்கொண்டு விளங்கக் கண்டு, ஆனந்தங்கொண்டு, பாடலநாதன் சந்நிதியை விண்டு, திருக்கோயிற் சென்று, திரிபுராந்தகனன் றிருவடி பணிந்து, விடைபெற்றுக்கொண்டு, திருச்சிற்றம்பல மென்னும் சிதம்பரத்தை யடைந்தார் மாணிக்கவாசகர் என்ற தூர்ச்சடியை பிரமசன்மன் வணங்கி, "ஞானகுருவே! தாங்கள் அடியேன்மீது கிருபைவைத்து இதுவரை யுரைத்த வாற்றால் என்மனம் மிகவும் பரிசுத்த மாயிற்று. மேலும், எனக்கு ஞானமுண்டாகுமாறு கங்கை "தவஞ்செய்தடைந்த விருத்தாந்தத்தையுஞ் சொல்லியருளல் வேண்டு" மென்றுப் பணிந்தான் என்று சூதமா முனிவர் சௌனகாதி முனிவர்களுக்குச் சொல்லியருளினார்.

தீர்த்த விசேடச் சருக்கம்

முற்றிற்று.

---



## 7. கங்கை தவம்புரிச் சருக்கம்

வாரண வாசி யென்றே வையகம் வழுத்து மேன்மை
யாரண முரைக்கு முண்மை யாங்கவி ரம்பு வன்னைப்
பூரண புகரி லாழ்ந்திப் புந்திகொந் தயருன் கான்முக்
காரண முணர்ந்த ஞானக் கவின்றவ மகதி யாழோன், 1.

வருகைகண் டுவகை பூத்த வலக்கர கங்கை யாழோ
னிருகைகண் முளரி பற்றி யிருந்தவன் மூழ்க வெற்காந்
திருகைகண் டொழிய செய்ய செய்திறஞ் செய்தி யொன்றே
யருகைகண் ணீருற் றிருப்ப வருந்தவ காத ணுங்கே, 2.

தளருறு கங்கா சழக்கற வேண்டின்
விளருறு வார்ந்து வியனுற வம்பிகை
வளருறு மேன்மை மணங்கமழ் பாதிரிக்
கிளருறு மாதலங் கிட்டிசெய் தவமே. 3.

சௌனகாதி முனிவர்கள் சூத புராணிகர் துணையடி பரவி, "சகலகலா ஞானங்களி லுஞ் சிறந்த வல்லமை வாய்ந்த தங்கள் திரு வாக்கினுலிது வரையிற் கேட்டதுபற்றி மிகவும் சந்தோஷங் கொண்டோம்! இனியும் தாங்களறிந்து சொல்லியவற்றிற் கங்கை தவம் செய்து பெற்றபேற்றையும் திருவாய் மலர்ந் தருளல் வேண்டு" மென்றுப் பணிந்தார்கள், அவ்விதம் பணிந்த சௌனகாதி முனிவர்களுக்குச் சூதமா முனிவர் பின் வருமாறு சொல்லலாயினர்.

முன்னொரு காலத்தில் வைவஸ்வதமனு செங்கோ லோச்சும்போது, புட்கர க்ஷேத்திரத்தில், ஆதிசைவ குல

மாகிய பிராமணகுலத்திற் பிறந்தவனாய், சகலசாஸ்திரங்களிலுஞ் சிறந்தவனாய், ஞானமார்க்கங்களிற் றவறாத மகா வுத்தமசீலனாய் விளங்கி யரனடிவணங்கிக் கொண்டு 'ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கிய'' மென்ற மூன்றக்கினி யுண்டுபண்ணி, அவ்வக்கினியிற் பன்முறை பல வகையான வேள்விகளைச் செய்து கொண்டு வந்தான்.

இவ்வித மியற்றும் யாகத்தின் மகிமையால் அத்தபாக்கினியானது சத்தியலோகம் வரையிற் பொருந்தி யாவரையுந் தகிப்பதால் இதனை இந்திரன் கண்டு, மனமுடைந்து, முன்னர் கௌசிகன் செய்த யாகத்தைவிட, இது மகாக்கொடுமையாக விருக்கிறது. இக்கொடுந் தீயின் வருத்தம் எவரையும் பாதிக்கும். ஆகவே, இத்தகைய சிறந்த வேள்வி நடாத்தும் வேதியன் மனதைக்கெடுத்து விடுவதே நலம். அதற்கு அவ்வேதவேள்வியோன் கண்டதும் விரும்பும்படியான ஓர் அழகிய பெண்ணை யவன்முன் செல்லவிடல் வேண்டுமென் றெண்ணி, தன்னாட்டிற் கடைகுலத்திற் பிறந்து சிறந்த வழகமைந்த குணவதியான சதமாயை யென்னும் பெண்ணைக்கண்டு, அச்சதமாயையைப் பார்த்து, ''குணமும் அழகுங் குலவும் சுந்தரியே! உன்னால் எனக்கொரு பேருதவி யாக வேண்டியுளது! அவற்றை நீ மறக்காது செய்வையேயானால் மிகவும நலமாயிக்கும். அதனால் உனக்கும் உலகத்தில் நல்லபுகழும் புண்ணியமு முண்டாகும். அதாவது புட்கர க்ஷேத்திரத்தில் வேதியனொருவன் நமக்குப் பெருந்துன்பத்தைத் தரும்படியான தவமியற்றி யத்தபோமகிமையால் நம்பதவியை யடைய விரும்பித் தவஞ் செய்து வருகின்றான். ஆகவே, நீ அத்தவத்தோனிடஞ் சென்று அவனை அவன்



நெறியினின்றுந் தவறித் தவத்தை யிழக்கச் செய்யுமாறுச் செய்வாயாக! அவ்விதஞ் செய்யுமுனக்கு நான் வேண்டிய வரங்களைத் தருகின்றேன்'' என்றியம்பிய விரணிய கருப்பன் சொல்லைக் கேட்ட சதமாயையும் சரியெனச் சம்மதித்துத் தன்னழகிய சரீரத்துடன் வேள்வி செய்யும் வேதியன் முன்பு சென்று மன்மதன் மலர்க்கணைகளை மறைபோன் பாலேவித் தன்னாலானத் தந்திரங்களைச் செய்தாள். அங்ஙனம், அருமறையுணர்ந்த வந்தணச் சிரேட்டன் சதமாயை செய்த காம வலையிற் கட்டுண்டு, கருத்தழிந்து, கண்ணிய மிக்கப் புண்ணிய தவத்தை யொழித்து, அழகெலா மொருங்கேயமைந்த இம்மட நல்லாள் எவ்வுலகத்திலிருந்து வந்தனளோ! அன்றி நாமியற்றிய தவத்திற் றோன்றினளோ! என்று மையல் வலையிற் சிக்கி, அறிவு மயங்கி சதமாயையைப் பார்த்தான்.

அங்ஙனம், அரிவையர் திலகமெனச் சொல்லுமாறழகமைந்த சதமாயையும் தன்னை மோகக் குறிப்புடன் பார்க்கும் வேதியனுள்ளக் கருத்தை யுணர்ந்தவள் மெல்ல மெல்லத் தவத்தோனிடஞ் செல்லவேப் பின் இருவரும் ஒருமனப்பட்டுக் கலந்த பின்னர் வேதியன் தன் தவநிலை முற்றுந் துறந்து சதமாயையின் காமவலையிற் கட்டுண்டிருந்தானாயினும், ஒவ்வோர் சமயம் தான் செய்வது தகாதென்றுணர்வான். அங்ஙன முணர்ந்துங் காமவிச்சையை விட முடியாதவனாய் வருந்தியும, அவ்விச்சையை விட்டொழிக்கப் பலகால் முயன்றும் பிரயோஜனப் படாது போயிற்று. கடைசியாக சிவனடியைச் சிந்தையிலேத்தித் தன்னிச்சை

யாகிய துன்பத்தை யகற்றுவான் விழைந்து § விபூதி யுருத்திராக்கத் தாரணனாய்ச் சிவகீதையைப் பாராயணஞ் செய்து தன் காலத்தை நற்கால போக்கிற் கழித்தனன்.

அவ்விதம் அவன் பாராயணஞ் செய்த சிவகீதையிற் கூறப்பட்ட விபூதி யத்தியாயமும், வில்வரூப வத்தியாயமும் பிராமணன் செய்யத் தகாததைச் செய்து பாவங்களைத் தாம் ஏற்று தன்னியனாக்கிவிட்டது. பிறகு பாவத்தை யேற்ற அவ்விரண்டும் முக்தி நகராகிய * வாரணவாசிக்குச் சென்று அங்குள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஸ்ரீ விசாலாட்சி சமேதராய் எழுந்தருளியுள்ள ஸ்ரீ விஸ்வநாதனைத் தரிசித்து மீண்டன.

அதன் பின்னர் கங்கை தானேற்றுள்ள கொடும் பாபத்தால் தன் வளங்குறைந்து தளர்வுற்றிருந்தனள். அதுசமயம், திரிலோக சஞ்சாரியாகிய நாரதமகாமுனிவர் அவண் வந்து கங்கை படுங்கட்டத்தைக் கண்டு மனஞ் சகியாதவராய், பாப மகற்றுஞ் சக்திவாய்ந்த பாகிரதியே! நின்பாப மகன்று நன்மையுற வேண்டுமாயின், சர்வலோக சரண்யனான சந்திரசேகரன் தன் அனந்த கலைகளோடு திருக்கோயில் கொண்டு விளங்கா நின்ற திருப்பாதிரிப்புலியூரை யடைந்து, அத்தலத்திலுள்ள சிவகர தீர்த்தத்தில் இரஷபம், (வைகாசி) கடகம், (ஆடி) விருச்சகம், (கார்த்திகை) கும்பம், (மாசி)

§ "விபூதி யுருத்திராக்கப் பிரபாவம்" என்னும் நூலை ஒவ்வொரு சைவசமயாபிமானிகளும் படித்தறிய வேண்டிய தவசியம். இந்நூல் இந்நூலாசிரியரால் தக்க நூலாதாரங்களுடன் எழுதப் பெறும். விலை அணா 4.

* வாரணவாசி-காசி.



ஆகிய இம்மாதங்களில் ஸ்நானஞ் செய்து தங்க ளபீஷ்டங்களைப் பெற்றார் பலராகையால், நீயும் அத்தலமடைந்து, அச்சிவகர தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, அங்கெழுந்தருளியுள்ள சித்தேஸ்வரனைத் தரிசிப்பாயாயின் உன் பாபங்களெல்லாம் அக்கினியிற்பட்ட பஞ்சுபோலா மென்று நாரதர் நவின்றது கேட்ட பாகிரதி யுடனே காசியம் பதியை விட்டு, திருப்பாதிரிப்புலியூரடைந்து, சிவகர தீர்த்தத்தில் முறைப்படி ஸ்நானஞ் செய்து, திருக்கோயிற் புக்கி, பாதிரி மூலத்தில் திவ்விய தேஜோ மயமாய் விளங்கும் பாடலீசுரனைப் பணிந்து பத்திக் கடலிற் பதிந்தனள்.

அவ்விதம் பத்தியிற் பதிந்துறையும் கங்கையை மங்கையொரு பாகன் பார்த்து, "கங்காய்! நாம் மாசி மாதம், நிறைமதி தினத்தில் சகல தேவர்களுங் கண்டானந்திக்கும்படி வெள்விடை யேறி நினக்குக் காட்சி தந்து கடாக்ஷிப்போம். ஆகவே, நீ இந்நாள் முதல் அந்நாள்வரை யிப்பதியிற் றங்கியிருந்து நம்மாலேற்படுத்தப்பட்ட சிவகர தீர்த்தத்திலும், பிரம தீர்த்தத்திலும் முறைப்படி ஸ்நானஞ் செய்து, உனதாயிரங்கலைகளிலொன்றை யிச்சிவகர தீர்த்தத்திற் கலக்கும்படியாகச் செய்து நம்மைப் பணிவுற்றுக் காசியம்பதியை யடைவாயாயி னினக்குற்றப் பாபம் நீங்குவதோடும், உன்பாலடைந்து மூழ்குவார் பாபங்களும் போம் என்றுரைத்த விறைவனைப் பணிந்து மகிழ்ந்து மாசிமாதம் வரையிலப் பாடலக்ஷேத்திரத்திலேயே தங்கியிருந்து முன்னர் முதல்வனுரைத்தவாறு இறைவனது இனிய உற்சவங்கண்டு, உற்சாகங்கொண்டு, சிவகர தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து தனது ஒப்புயர் வற்ற வாயிரங்கலைகளி லொன்றை இறைவன் பணித்த

வாறே சிவகர தீர்த்தத்திற் கலக்கும்படிச் செய்து தோன்றாத் துணைவரையும், தோகை யம்பிகை யம்மையையும் வியன் முறையிற் பணிந்து காசியம் பதியை யடைந்தனள்.

அந்நாள் தொடங்கி யப்பாடலவன க்ஷேத்திரத்தில் விளங்கா நின்ற சிவகர தீர்த்தத்திலும் சமுத்திர தீர்த்தத்திலும் கும்பராசியில் (மாசி மாதம்) சிம்மலக்கினத்திற் சந்திரனிருக்கிற காலத்தில் ஸ்நானஞ் செய்தோர் தங்கள் பாபங்களெல்லாம் பாறியோடிடப் பெற்று பரமானந்தப் பதவாழ்வைப் பெற்றுய்வார்க ளென்றுரைத்த சூர்ச்சுடியை வணங்கிய பிரமசன்மன் மீண்டும் சர்வ பாபங்களையுஞ் சாம்பராக்கும் தழற்கடவுள் என்னகாரணத்தால் பாவமேற்று புலிசை புக்கிப் பேறு பெற்றான் என்பதை யடியேனுக்கருள் கூர்ந்துத் திருவாய்மலர்ந்தருளல் வேண்டுமென்றிறைஞ்சினன் என்று சூதமாமுனிவர் சௌனகாதியர்கட்குச் சொல்லியருளக் கேட்ட சௌனகாதி முனிவர்கள் சூதரடிபணிந்து அக்கினி பகவான் பாபமகலப் பெற்ற விருத்தாந்தங்களையு மடியேங்கட்குச் சொல்லவேண்டு மென்றிறைஞ்சினர்.

கங்கை தவம்புரிச் சருக்கம்

முற்றிற்று.

---

சிதம்பர ரகசியம்.

நல்ல கிளேஸ் பேப்பரில் பழய ஏட்டு பிரதிகளை கொண்டு அச்சிடப்பட்டிருக்கிறது விலை அணா 8.



## 8. அக்கினி பகவான் றவம்புரிச் சருக்கம்

வன்னிமா தேவனவன் றேவர்களுக் கவிர்பாகம்
வழக்குந் தொண்டிற்
சென்னிமா சேடனாக விருந்தவன் மனமேங்கித்
திகைப்பா னாகித்
துன்னிமா கடலிற்புக்கி மறைந்தவ னிருந்தகாலத்
துகடவிர் தேவ
ருன்னிமா நிலமெங்குந் தேடியுங்கா ணாதாகி
யுற்றார் தாங்கம், 1

தாங்கமுகஞ் சார்ந்தமக தேவர்களின் றயறிரங்கே
தனர்வுற் றுங்கே
வரங்கமழுக் தேவர்களை யொருமகாம் விளித்துகலம்
வழுத்துஞ் சீர்த்தி
யுரங்கமழும் வன்னியவன் கடலொளிந்தா னென்றுரைத்து
வுரைசான் மகாங்
காங்கமழும் வினையகலத் தேவரிடம் வரவேற்றுக்
கழிந்த பின்னர், 2

தேவ விருடிகள் திகைத்தங் குணர்ந்து
தேவ மருத்துவச் சிரியனைக் கொண்டு
யேவ லுருற்றிய வெழிலழத் தேவனை
மேவ லாரயுறு வேதனை போக்கினர், 3

அன்னதன் பின்னர் வன்னி யரியமா தேவர்க் கெல்லா
மன்னதன் றொற்ற லாலே நன்மகத் தவிர்பா கத்தைச்
சொன்னதன் படியே பீக்குஞ் சுடரவன் பலர்முன் னுண்டத்
தொன்னதன் குற்றந் தீரச் சொற்றவஞ் செய்தான் புலிசை, 4

அப்பதி யணுகியே ஆலமர்க்குஞ் சொலற்கரிய
செம்பதி யார்க்துரை தேவியா மிறைவியர்க்கும்
கம்பதி யிதுவாமென லமேயுற் றடைந்தானே. 5

## அக்கினிவளர்க்கும் அருந்தவ முனிவர்காள்!

முன்னொருகாலத்தில் சுவாஹாதேவி நாயகனான அக்கினிபகவான் திரிலோகங்களிலுமுள்ள தேவர்கள், முனிவர்கள், அரசர்கள் முதலானவர்களாலும், முப்புரி நூலணியும் விப்பிரர்களாலும் * மூன்றக்கினி வளர்த்துச் செய்யும் யாக குண்டங்களில் கொடுக்கப்படும் அவிர்ப்பாகத்தை தேவர்களெவர்களுக்கும் கொடுத்துவரும் அழற் கடவுளுடன் பிறந்த மூவருக்கும் ஆயுள் முடிந்தது. அதன் பின்னர் நால்வருஞ் செய்துகொண்டிருந்த வேலைகளெல்லாம் அக்கினிக்கு வரவே, நால்வர் செய்த வேலைகளை யக்கினி பகவான் ஒருவனே செய்யவியலாது திகைப்புற்று என்செய்வோமென்றேங்கிக் கடலிற் போய் மறைந்து கொண்டனன்.

அவ்விதம் அக்கினி பகவான் ஆற்றலற்று அலைகடலிற் பதுங்கிக் கொள்ளவே, அவிர் வாங்கி யுண்ணும் தேவர்கள் வாடி, அக்கினியை அகில மெங்கணுந் தேடி, எங்குபோயொளிந்தானென நாடி யலைந்து சமுத்திரக் கரையோரஞ் சென்றார்கள். அச்சமுத்திரக்கரை யணுகி யுலாவிய வோர் மகரமீன், கீழ்திசை யிறைவனைக் காணாது வருந்தி நிற்பவர்களை நோக்கி, நீவிர் எதுபற்றி யிவண் வந்து சிந்திக்கின்றீர்கள்? எதுவும் சிந்திக்க வேண்டாம்! நீங்கள் தேடியலையும் அழற்கடவுள் கடலிலொளிந்து கொண்டானெனச் சொல்லியத்தேவர்களிடம் அம்மகரமீன் தான் சந்ததம் இமையா நாட்டவரம் பெற்றுச் சென்றது.

---

* "ஆகவனீயம், காருகபத்தியம், தெக்ஷிணாக்கினி" என்பனவாம்.



அதன் பிறகு தேடிச்சென்ற தேவர்களெல்லாம் அக்கினியைக் கண்டு, மருத்துவ தேவனைக் கொண்டு, அக்கினியைத் துன்புறுத்தும் நோயகற்றி, அவிர் சுமக்கும் போராற்றலுண்டாகும்படிச் செய்து, எப்போதும்போல் அவிர் சுமக்கக் கட்டளையிட்டுத் தங்கள் தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள்.

அதன் பின்னர் அக்கினி அமரர்களுக்கு அவிர் சுமந்தும், அட்டதிக்குப் பாலகர்களுள் ஒருவனாயு மமர்ந்தான். இவ்விதமாக எரியழலிறைவன் அநேக காலங்களாய் எவர்களிடத்தும் பேதமின்றி எதையு முட்கொள்ளும் அக்கினியை அசுத்தனென்று மூவுலகத்தி லுள்ளவர்களாற் சொல்லப்பட்டது.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பதவிகளையு மடைவதற்கு ஞானமே சிறந்த காரணமாதலாலும், அச் சிறந்த ஞானமானது சத்வ, ரஜோ, தமோகுண பேதங்களா லுண்டாவதாலும், அதற்கேற்றவாறு அளவோடுகூடிய வுணவருந்தல்வேண்டுமே யல்லாமல், அளவுக்குமிஞ்சி யருந்துமுணவா லெழுந்தது இத்தீயச் சொல்லென்று தேவகுருவாம் பிரகஸ்பதியிட மடைந்து, "தேவ தேவனே! சிற்றறிவுள்ள சிறியேங்களைத் திருத்தி யாளவந்த குருவே! அடியேன் றுயரை யகற்றியாண்ட வையனே! என்றிறைஞ்சிய வக்கினி தேவனை பிரகஸ்பதி பார்த்து, "கேளாய் அக்கினியே! பூலோகத்திற் புண்ணிய பூமியெனப் புகழும் பாரத கண்டத்திற் பத்தர்கள் வதியும் திருப்பாதிரி வனம் என்னும் புண்ணிய க்ஷேத்திரமானதும், திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூர் என்ற ஊரிலே வேளாளர் மரபு விளங்கத் திரு

வவதாரஞ் செய்தவரும், அரவந்தீண்டிய வப்பூதியடிகளின் திரு குமாரருக்கு உயிர்ப்பிச்சை யளித்தவரும், அமணர்களாற் கல்லிற் கட்டி கடலில்விடப்பட்ட அப்பர் சுவாமிகளைக் கடலினின்றுங்கரையேற்றியதால் உத்தாரபுரமென்னும் பெயருடையதும், உருத்திரசன்மன் பூஜிக்கக் கண்பெற்று கவலை நீங்கி கைலையிற் சேர்ந்ததும், சத்திய சந்தனென்னுஞ் சக்கரவர்த்தி தரிசிக்கத் தன் வினைநீங்கிச் சந்ததமும் சிந்தை மகிழ்ந்திருக்கச்செய்ததும், மார்த்தாண்டன் குடல்நோயகற்றியது முதலான மகிமை வாய்ந்த பாடல க்ஷேத்திரத்திற் றவம் செய்து அடைதற்கரிய பெரும்பேறடைந்தார்கள். அத்தகைய மகா மகிமை தங்கிய பாதிரிவனத்திற் றிருக்கோயில் கொண்டெழுந்தருளி யிரானின்ற ஸ்ரீ பாடலநாதனையும், ஸ்ரீ பாடலீஸ்வரியையும் கண்டு தரிசித்தால் நீ செய்த பாபங்களெல்லாம் பறந்துபோமென் றுரைத்தார் பிரகஸ்பதி பகவான்.

அவையனைத்துங் கேட்ட அக்கினி பகவான் அளவற்ற வானந்தங் கொண்டு, தன்னையடைந்த பாபமகலப் பாடலவன மடைந்து,சிவகர தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, திருக்கோயிற் புக்கி, பிரதக்ஷணஞ் செய்து, முறைப்படி விநாயகராதிய தேவர்களைப் பணிந்து, பாடல மூலத்துறைந்து விளங்கும் உத்தாரேசனைப் பணிந்து, தான் வந்த குறையை முறையிட்டு நமஸ்கரித்தான்.

அதுகாலை யக்கினி பகவானுக்கு அருள் சுரந்தருள் புரிவா னுவந்த ஆலமர்க் கடவுள் அந்தண வடிவந் தாங்கி, அக்கினி தேவன் முன்வந்து "அன்பனே! உனக்குற்ற துன்பம் நீங்கிச் சுகமடைய வேண்டுமேயானல் உத்தமமான இச்



சிவ க்ஷேத்திரத்தில், உத்தராயணத்தில், மாசி மாதம் வரையிற் றங்கிருந்து, பூரணச்சந்திரன் கூடிய மக நட்சத்திரம் மருவுநன்னாளில் சூரியோதயமான ஐந்து நாழிகைக்குள் சமுத்திர தீர்த்தமான பிரமதீர்த்தத்திலும், நம்மாற் றோற்றுவிக்கப்பட்ட சிவகர தீர்த்தத்திலும் முறைப்படி ஸ்நானஞ் செய்து முன்னவனான உத்தாரேசனைத் தொழுதிறைஞ்சுவையேல், நின் பாபங்களெல்லாம் பாறியோடிட மகா பரிசுத்தனாவா யென்றுரைத்த வேதியராய்த் தோன்றிய விமலன் வாக்கைச் சிரமேற்றாங்கி, மாசிமதி, பூரணச் சந்திரன், மக நட்சத்திரம் மருவுங்காலம்வரை தாமதித்திருந்து, அருமறை போற்றும் அகில காரணனறிவித்தவாறு அந்நன்னாளில் செயவானவைத்தும் முறையிற் செய்து தன்குறை யொழிய மங்களம் பெற்றானெங்கும் புகழத் தங்குதன் னிருப்பிடஞ் சென்றானென்று தூர்ச்சடி தன் சீடனான பிரமசன்மனுக்குச் சொல்லியருளினார் என்றுரைத்த சூதபுராணிகரை மாதவச் சீலர்களான சௌனகாதியர்கள் மீண்டும் தூர்ச்சடிக்கும், பிரமசன்மனுக்கும் நடந்த சம்பாஷணை யென்னவென்று வினவலாயினர். அவ்விதம் வினவியவர்களுக்குச் சூதபுராணிகர் சௌனகாதியர்களைப் பார்த்து, தூர்ச்சடி தன் சீடனான பிரமசன்மனை நோக்கி உமாதேவியாருக்கு உத்தாரேசன் காஷிதந்த விருத்தாந்தங்களைச் சொல்லி யருளினார். அவற்றையும் சொல்கிறேன் கேளுங்கள் என்று கூறவா ராயினர்.

அக்கினி பகவான் றவப்புரிச் சருக்கம்

முற்றிற்று

---

## 9. உமாதேவியாருக்கு ஊத்தாரேசர்

### காக்ஷிதந்தச் சருக்கம்

*மன்னுதிருப் புலியூர் புக்கி மருவியாங் கிலங்கு மேன்மைத்*
*தன்னுதிருப் பிரமன் தீர்த்தந் துகளொழி சிவங்கை ர்த்த*
*மென்னுதிருப் புனலிற் றோய்ந்து இறைவிமா தவமேசெய்யப்*
*பன்னுதிருப் பன்னி முன்னைப் பாசிவன் காட்சி தந்தான்.*

"ஆரணடி வணங்கும் அருந்தவச் சீலர்காள்!" என்று சௌனகாதியர்களை. சூத புராணிகர் விளித்து, "அன்பர்களே! அண்டரும் துதிக்கும் மண்டலத்தில், தேவர்களுக்கெல்லாம் தேவனும் விளங்கும் சூலபாணியாம் தோன்றாத் துணைவர் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய திருப்பாதிரிப்புலியூர் என்னும் புண்ணிய க்ஷேத்திரத்திலுள்ள சிவகர தீர்த்தத்திலும், பிரம தீர்த்தத்திலும் மாசிமாதம் பௌர்ணமியில் ஸ்நானஞ் செய்தவர்களுக்கு எல்லா பாபங்களும் நீங்குவதோடு, நோயற்ற சுக வாழ்வாவும், குறைவற்ற நிறை செல்வமும் உண்டாமென்றுரைத்த விமலன் வாக்கை வேத நாயகியு மேற்று அன்று முதல் அத்தலத்துள்ள சிவகர தீர்த்தத்திலும் சமுத்திரத் தீர்த்தத்திலும் ஒவ்வொரு மாதமும் பூரணச் சந்திர நன்னாளில் முறைப்படி நீராடி விபூதி யுருத்திராக்க மணிந்து, மங்கையர்க் குரிய குங்கும திலதமிட்டு நித்திய கருமானுட்டானங்களைத் திரிகரண சுத்தியோடியற்றி, பாதிரி மூலத்தை யடைந்து, பாடலநாதனைப் பணிந்து சோமவாரம், (திங்கட் கிழமை) பிரதோஷம், மாதசிவராத்திரி, மகாசிவராத்திரி



முதலிய விசேட புண்ணியகாலங்களிற் கருத்தொருமித்து அரிய தவமியற்றி வரும்போது, திருக்கைலாயத்தில் திவ்விய தேஜோமயமான மணிமண்டபத்தில் விளங்காநின்ற எங்கும் நிறைந்த ஏக நாயகன் விருஷப வாகனத்திலேறி, நந்திஎம்பெருமான் முதலிய சிவகணங்கள் சூழவும், பிரம, விஷ்ணு முதலான தேவர்கள் கூடவும், கருடர், கந்தர்வர், வித்தியாதரர், தும்புரு, நாரதர், பிருங்கி, பதஞ்சலி, வியாக்கிரபாதர்" முதலானவர்கள் அணிவகுத்து வரவும் எம்பெருமான் அருந்தவம் புரியும் பெருந்தவ நாயகியாம் பிரகந்நாயகி பாங்கர் வந்து கழறருங் காக்ஷியைக் காண்பித்தருளினர்.

அவ்விதம் காக்ஷி தந்தருள வந்த அந்திவண்ணன் வருகையை யருந்தவநாயகி கண்டானந்தங்கொண்டு, கரங்கூப்பி, உரோமஞ் சிலிர்ப்ப, அங்கமொடுங்க, அன்பு நிறைந்து, கனிந்த வுள்ளத்துடன் கழலடிபணிந்து துதிக்கும் நாயகியை யாதியந்தமற்ற அருட்பெருஞ்சோதியான சுடலையாடி பார்த்து, "உறுதி நிறைந்த உள்ளத்தையுடைய வுமையே! நாம் உன்னுடன் முன்னர் சொக்கட்டாட நீ வெறுக்கத்தக்கதும், அதன் காரணமாக உன்னைத் தவஞ் செய்யுமாறு பணித்ததும், பின்னர் நமது சிவகணத்தவரிருவரை தூர்ச்சடி பிரமசன்மன் என்ற குரு சீடர்களாக வனுப்பியதும், இப்பாடலவன க்ஷேத்திரத்தின் பெருமையை மக்களெவர்களு மறிந்துகொள்வான் வேண்டி நிகழ்த்திய நம் திருவிளையாட்டென் றறிவாயாக வென்றுரைத்துப் பின்னும் பிரியே! நீ தவம் செய்த வித்தலத்தில் ஒரு கலையோடுறைந்து உன்னையண்டினோர் பாபமகலுமாறு அருந்தவநாயகி யென்ற காரணப் பெயருடனிருந்து அருள்புரிவாயக! மற்றகலை

ளெல்லாம் பெரியநாயகி யென்னும் பெயரோடு விளங்குவ தாக! நாம் முன்னர் கூறியவாறு ஆடிப்பூரத்தெழுந்து இங் குள்ளார் யாவருங்காண திருமணஞ் செய்துக்கொள்வோம்! என்றியம்பியது கேட்ட பரசிலையானவள், "என்னையனே! அடிமையாகிய வடியாளறியா தியற்றிய குற்றத்தைப் பொறுத்து ஆட்கொண்டருள வேண்டுமென்று பணியவே, அகிலகாரணன் *அவணுள்ளாரனைவரும் காண, தமதுதிருக் கரத்தால் தவநாயகியின் தமனியக் கரத்தைப்பிடித்தழைத்துக் கொண்டு தேவவாத்தியங்கள் முழங்க, பூமாரிபொழிய ஆங் குள்ள பாடல மூலத்துள்ள சிவலிங்கத் திருமேனியிற் கலந் தருளினார் என்று சூதபுராணிகர் சௌனகாதியர்களுக்குக் கூறினார்.

ஊமாதேவியாருக்கு உத்தாரேசன்
காக்ஷிதந்தச் சருக்கம்
முற்றிற்று.

---

## 10. அருந்தவநாயகியைப் பூசித்துப் பேறடைந்தோர்கள் சரித்திரச் சுருக்கச் சருக்கம்

இருந்தவச் சவுனக ரியாரு மெக்தைபாம்
பெருந்தவச் சூதனைப் பெரிதும் போற்றியே
யருந்தவச் சத்தியா மன்னை தான்பணிந்
திருந்தவச் சித்தர்க ளிசைந்த செய்கெனு, 1.

சூதனுங் கூறவன் றலக்கு மாதவீர்!
யேதமி லாதியா ளியம்பற் பாலனோ?
பூதலஞ் சடர்முடிப் பொலிபு மங்கனு
மோதநா வயருவ னுண்மை புண்மையே! 2.



என்றவச் சூதனை யியன்ற செய்கெனு
நன்றவிர் மாதவர் நயந்து கேட்டலு
மின்றவ ரிமையவ ரெவரும் போற்றினு
ரென்றவர்க் கிசைத்தன னிருந்தவச் சூதனே. 3.

திருப்பாதிரிவன க்ஷேத்திரத்திலுள்ள அருந்தவ நாயகியம்மையைப் பூசித்துப் பேறடைந்தோர் வரையிலராயினும், ஈண்டு சிலவற்றைச் சொல்கின்றேன் கேளுங்கள் சௌனகாதி முனிவர்களே! என்று சூத புராணிகர் பின்வருமாறு கூறுவாராயினர்.

*மகத்திற் சிறந்த மகரிஷிகளே! "அண்டரும் போற்றும் அருந்தவ நாயகி யாருக்குத் தேவர்கோன் விசுவகருமனென்கிற தேவதச்சனால், பாடலமூலத்தின் கீழ் திருக்கோயில் சிறப்புற வமைத்து, அதில் அருந்தவநாயகி யம்மையாரை யெழுந்தருளச் செய்து எல்லையற்ற இன்ப சாகரத்திலாழ்ந்தினன்.

அருந்தவ நாயகியும் தன்பால் அதிபத்தி விசுவாசத்துடன் வந்து பணிந்தவர்களுக்கு வேண்டிய விருப்பங்களைக் கொடுத்தும், சுக்கிரவாரத் (வெள்ளிக்கிழமை) தன்று தன்னை யண்டிப் புட்பங்களாலர்ச்சித்துப் பணிந்தார்க்கும், மங்களவாரத் (செவ்வாய்) தில் தாமரைமலரால் பூசித்தவர்களுக்கும், மகா நவராத்திரியில் விரதானுட்டான மிருந்து நியமத்துடன் தொழுவார்க்கும் சகல பாபங்களைப் போக்கியும், இகத்திலும், பரத்திலும் மேன்மையாம் வாழ்வை யீந்தும் விளங்கினாள்.

---

* மகம்—யாகம். வேள்வி யெனினும் பொருந்தும்.

இத்தகைய சர்வ சத்தியும் வாய்ந்த சர்வலோக மாதாவான அருந்தவநாயகியாம் பிரகந்நாயகியைத் தரிசிக்காதோர் மகாபாபிகளே யாவர். மேலும் பிறவிகடோறும் வறுமையுற்று, வீடுகடோறு மிரந்துண்டு வருந்துவர் என்றுரைத்த சூதரை சௌனகாதிகள் நோக்கி குருநாதனே! இன்னும் அன்னையாம் அருந்தவ நாயகியைப் பூசித்தருள் பெற்று பேறுற்றோருளரேல் அவற்றையும் கூற வேண்டுமென்று கேட்க, சூதர் சௌனகாதி முனிவர்களைப் பார்த்து, "அறிஞர்களே! அருந்தவநாயகியை அன்புடன் பூசித்துப் பேறடைந்தோர் நாராயணன், நான்முகன் முதலிய தேவர்கள் பலரும் பணிந்து பாக்கியப் பேற்றை யடைந்தார்கள். வாசவன் மனைவியாகிய இந்திராணி யிரைந்து சுக்கிரவாரம் அதிபக்தி சிரத்தையோடு பூசித்து ஜெயந்தனென்னும் புத்திரனைப் பெற்றாள். காசிபரின் மனைவியருள் அதிதி யென்பாள் பத்து சுக்கிரவாரம் பத்தியோடு பூசித்து ஆதிதேவரைப் பெற்றாள். கிருத்திகாதேவிகள் இவ்வருந்தவ நாயகியைப் பூசித்ததினாலேயே சரவணப் பொய்கையில் வந்து ஆறுமுகங்கொண்ட சுப்பிரமணியத்திற்குத் தாயைப்போல் பேணும் பாக்கியம் பெற்றார்கள். துவாதசாதித்தியர்களும், வசிட்டர் முதலிய விருடிச் சிரேட்டர்களும், அமரமாதர்களும், இருடிபத்தினிகளும் அருந்தவநாயகியைப் பூசித்து தங்கள் தங்களிஷ்ட பூர்த்தியை யடைந்தார்கள்.

இத்தகைய இரும்பேறடைந்த விறைவியைப் பணிந்து பாக்கியம் பெற்றவர்களை யெல்லாம் கூறுவதென்றால் ஆயிரம் நாவைப்படைத்த ஆதிசேடனாலு மரிதாம். மேலும், மறை



முடி யன்னை மான்மியம் வழுத்த வாமதேவனாலன்றி மற்றையோரெவர்களாலும் முடிந்த தன்றென்றுரைத்த சூதமா முனிவரைத் துணையடிபரவி, "எங்கள் நற்றவ குருவே! அன்னையாம் அருந்தவநாயகி தவம்புரிய கற்பகத் தருவையொத்திலங்கும் பாதிரி விருக்ஷத்தின் மகிமையையும் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று பணிந்தார்கள்.

அருந்தவநாயகியைப் பூசித்துப் பேறடைந்தோர்கள் சரித்திரச் சுருக்கச் சருக்கம் முற்றிற்று.

---

## 11. பாதிரி மகிமைச் சருக்கம்

வளமிருந்த நான்மறைக ளுடனே மேலாம்
மற்றுமுள கலைகளெலாங் கழருஞ் சீர்த்தி
நளமிருந்த வாறோங்கித் தண்ணீர் நிழலை
நாயகனெம் மிறைவர்க்குத் தருவ தன்றீஇக்
களமிருந்த வெவராயின் களிப்புற் றங்கே
கனமுற்றே சிறிதிருப்பின் வினைகள் மாயும்
அளமிருந்த பாடலகன் பெருமை யெலாம்
அறைவதெனின் சேடனுநா வயரு வானே.

தவத்திற் சிறந்த சௌனகாதியர்களே! உலகமுய்ய விளங்கும் நான்கு வேதங்களும், அதனுப நிடதங்களும், ஆறு சாத்திரங்களும், இருபத்தெட்டாகமங்களும் புகழும் சித்தபுரியென வழங்கும் சிவ க்ஷேத்திரத்தில் நான்கு யுகங்களிலும் ஒரே மாதிரியாகத் தழைந்து நல்ல மணந்தரும்படியான புட்

பம் நிறைந்த பாதிரி விருக்ஷமானது சிவலிங்கப் பெருமானுக்குத் தண்ணிழல் தாநிற்கின்றது.

இப்பாதிரி விருக்ஷத்தின் மகிமையைப் பூரணனலன்றி எவராலும் விரித்துரைக்க வியலாது. இம்மகா விருக்ஷமே முத்தி தரும் க்ஷேத்திரமாகிய கயாவில் வட விருக்ஷமாகியும், அயோத்தியில் கேதாரமாகியும், வடமதுரையில் துளசிச்செடியாகியும், திருக்காளத்தியில் கல்லாலாகியும், திருக்காஞ்சியில் மாமரமாகியும், திருவானைக்காவலில் நாவன்மரமாகியும், இன்னும் பல க்ஷேத்திரங்களிலும் சொல்லற்கரிய பல விருக்ஷங்களாகியு மோங்கி வளர்ந்து தழைந்து சிவ பெருமானுக்குக் குளிர்ந்த நிழலையும், நல்ல வாசனையையும், கனிகளையும் தரத்தக்கதே போன்று பாடலி நாதனுக்கு இப்பாதிரி விருக்ஷமே தண்ணிய நிழலைத் தாநின்று தன்னைச் சார்ந்தார் பாபங்களைப் போக்கி சகல சித்திகளையுந் தரத்தக்கதாய் விளங்குகின்றது.

அன்றியும், இப்பாடலவனத்தி லருந்தவமியற்றிய வன்னையாம் அருந்தவ நாயகிக்குத் தவஞ்செய்யுங்காலத்தில் தக்க பல உதவிகளைச் செய்து கொண்டிருந்ததும் இப்பாதிரி விருக்ஷமேயாம். இம்மகா மகிமை வாய்ந்த பாதிரிவிருக்ஷமோ அநேக சதுர்யுகங்களாயுள்ளது. அநேகருக்கு அரிய பல நன்மைகளைச்செய்ததனியது. இப்பாதிரியின் பெருமையைப் பற்றி யுரைக்க ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனாலும் வியலாதெனின் எளியனால் என்னென்றியம்பக் கூடும்? இப்பாதிரி விருக்ஷத்தைக் கண்டோர், இவ் விருக்ஷத்தினடியிற் றங்கினோர், வலம் வந்தோர், ஒருதரமேனும் இவ் விருக்ஷத்தை நினைத்தோர் ஆகியவர்களுக் கெல்லாம் அநித்தியமாகிய



சதாசிவமூர்த்தியின் சாயுஜ்ஜிய பதவி கிடைக்கும் என்பது உண்மை! உண்மையே!! யென்றுரைத்த சூதமா முனிவரை சௌனகாதியர்கள் போற்றிப் பணிந்து, “எம்மையனே! தாங்கள் தயை கூர்ந்து சாற்றியருளிய பாதிரிவிருக்ஷத்தின் மகிமைகளை யுரைக்கப் பெற்றோம், இன்னும் அவ்விருக்ஷத்தின் மகிமையைச் சிறிதுரைக்க வேண்டுகின்றோ மென்று பணிந்தனர்.

பாதிரி மகிமைச் சருக்கம்

முற்றிற்று.

---

## 12. மங்கணரிஷி தவப்புரிச் சருக்கம்

திங்களங் கொழுந்து வேய்ந்தச் சிவனடி மறவா தேத்தும்
மங்கண மாதவச் சீலன் மாவனம் புக்கி யோர்நா
ளங்குள கோதிற் போது வாய்ந்தபத் கனியுங் கொண்டே
சங்கரன் பூசைக் கேற்பச் சழக்கறச் சேர்த்தா னங்கே (1)

ஓங்குறு வான முட்க ளொண்முனி யவனைத் தாக்கத்
தாங்கிய விடத்திற் செந்நீர் ததும்பிடக் கண்ட காலைத்
தீங்குநீ ரிதுவா மென்றூஉந் தெளிவுற முகர்ந்த போது
ஆங்கவிர் செந்நீ சொல்கா வதிமணம் வீச லன்றே. (2)

நன்மணம் வீசிட நற்றவ மங்கணன்
புன்மனத் தார்களி பொங்கி யெழுந்தனன்
தன்மனத் தன்மையைத் தான்மறந் தாங்கவன்
சின்மயத் தேவன்மேற் றீண்டிசாற் பட்டதே. (3)

*போத மிகுந்த சூத புராணிகர் சௌனகாதியர்களைப் பார்த்து முனிவர்களே! புண்ணியம் நிறைந்து கண்ணியம் மிகுந்த புட்கர க்ஷேத்திரத்தில், பூசுரகுலத்திற் பிறந்து வேதசாத்திர முணர்ந்த பெரியாரா யெங்கும் புகழ் விளங்கிய மங்கண மாதவர் என்பவ ரொருவ ரிருந்தார். அம் மாதவச் சீலர் காமக் குரோதாதிகளை வெறுத்து, பாசபந்த மற்ற மகாபரிசுத்த மனத்துடன் கங்கையணி சங்கரனை மங் களகன் மனத்திருத்தி கந்தமூலாதிகளை யுண்டு வியன் பெற் றுய்வான் விழைந்து விதிமுறை வழுவாது ஆயிரம் ஆண்டள வும் அருந்தவமாற்றி வந்தார்.

அம்மாதவ மங்கணர் ஒருநாள் தேசுடைய வீசன் பூசைக்கு வாசமிகு மலர்களையும், பசுமைதங்கிய பத்திரங் களையும், பலகனிவர்க்கங்களையும், கெடுதிகளில்லாதவாய்ப் பார்த்து சேகரிக்கும்போது, அங்குள்ள முட்செடிகளிலிருந்த முட்கள் மங்கணர் காலிலும் கையிலுமாகக் கிழிக்க வதனால் காயமேற்பட்ட விடங்களில் செந்நீர் கசிந்து துர்க்கந்தம் வர வேண்டிய நீர் நறுமணங்கமழும் நன்னீர் பெருகி வரலாயிற்று. அதுகண்ட மங்கணர் தனது தவத்தின் காரணமாக இவ் விதம் மணங்கமழும் நன்னீர் வருவதாமென்றெண்ணி யானந் தங்கொண்டு தன்னை மறந்தவராய்த் தலைகால் தெரி யாது துள்ளிக்குதித்து அவ்வனமெங்குந் திரிந்துபோனவர் தக் கூத்தாடினார்.

* போதம்—அறிவு. ஞானமெனினும் பொருந்தும்.



அதுபோழ்து மெய்மறந்த மங்கணர்தம் கால்கள் கருணாநிதியாம் கங்கைவேணியன் சிரத்திற்பட்டன. அதற் காக அகிலகாரணன் ஆறாத கோபங்கொண்டு தன்மேல் கால்கள்படச் செய்தவனாமென் றோர்ந்தறியா "முயல்" போற்குதித்துப் பிறர்மேல் கால்படச் செய்தன் "முயலே யாகுக" வென்று சாபமிடவே, அந்திவண்ணன் அருளிய சாபத்தா லுடனே மங்கணர் "முயல்" வடிவேற்று மிகவும் விசனத்தோடு விமலன் மெல்லடியில்வீழ்ந்து "எம் மையனே! அறிவில்லா வடியேன் அறியாது செய்த பிழைக் காக வருந்தும்படியாக சாபமித்தீரே! இச்சாபமகலும் காலை நீரே சொல்லல்வேண்டு"மென் றிறைஞ்சித் தழ்ந்தனன்.

அங்ஙனம் மங்கணரென்றறிந்த வாமதேவன் மிக்க விரக்கங்கொண்டு மங்கணமாதவனைப் பார்த்து "அன்பனே! நாம் உமக்கருளிய விச்சாபம் ஒரு நாளும் வரையிலும் நின்னைவிட்டு நீங்காது தொடர்ந்து நின்று முடிவில் இச் சாபமகல நல்வினையுதிக்கும். நீ அதுபோழ்து கற்பனை கடந்தவன் பொற்புடன் விளங்கும் அற்புத மருந்த விற்பனர் புகழும் தொன்மையம்பதியாம் பாதிரிவனத்தில் வசிப்பாய்! அப்பாடல க்ஷேத்திரத்தில் பக்தகோடிகள்தன்னைப் பணிந் துய்யுமாறு தனது அநந்தகலைகளோடு விளங்கா நின்ற ஸ்ரீ பிரகந்நாயகி சமேதராய ஸ்ரீபாடலீசுவரனுக்குக் கார்த்திகை (விருச்சிகம்) மாதத்தில், சோமவாரத்தில் பக்தர்கள் பல்லா யிரந் திருவிளக்கேற்றித் தரிசித்துத் தொழுவார்கள். அது சமயம், அத்திருத் தீபதரிசனங் கண்டானந்தங் கொள்ளு நினக்கு இம்"முயல்" வடிவகன்று முன்னை யுருவமடைவாய்! நிஜ உருவமடைந்தபின், நீ அப்பாடல க்ஷேத்திரத்தில் சிவ

பெருமாளிருக்கரத்தாற் றோன்றிய சிவகரதீர்த்தம், மற்று முள்ள புனித தீர்த்தம் முதலியவைகளில் ஸ்நானஞ்செய்து அத்தலத்தையும் அகில காரணனையும், அகில காரணியை யும் அன்பொடு வழிபட்டு சிவசாயுஜ்யமடைவாய்" என் றுரைத்த ரமதேவன் வாக்கியத்தைக் கேட்ட மங்கணரிஷி யப்புண்ணிய பதியாம் பாடலவனமடைந்து, தனக்குற்ற சாபம் நீங்வேண்டிய காலம்வரையில் சிவகரதீர்த்தம், சமுத் திர தீர்த்தம்பெண்ணை, கெடிலம், பாலோடை முதலிய பலதீர்த்தங்களிலும் நியமமாக ஸ்நானஞ்செய்து ஸ்ரீ பாடலே சுவரனையும், ஸ்ரீ பிருகந்நாயகியையும் பக்தியுடன் துதித்துக் கொண்டிருக்க, மங்கணருக்கு சாபங்கிடைத்த நாளொன்றி னியாக கார்த்திகை மாதம் சோமவாரத்தில் பாடலக்ஷேத்தி ரத்திற் பக்தாதிகளால் ஏற்றுவிக்கப்பட்ட திருவிளக்கி னொளியைக் கண்ணுற்று, முனனர் முதல்வனருளியவாறு பூர்வவுணர்ச்சிமேலிட்டு மங்கணருக்கு வாய்த்த சாபமகலும் காலன்றாதலால் பாடலீசுவரனைப்பணிந்து வலம்வரும்போது ஒரு நாய் துரத்த வதற்குப் பயந்து பாதிரி விருக்ஷத்தின் தூறில் புக்கவே, உடனே மங்கணருக்கு நேர்ந்த சாப மகன்று, பழையவுருவேற்று சிவபதத்தையடைந்தார்.

ஆதலால், அத்தகைய சிறப்புவாய்ந்த பாடலக்ஷேத் திரத்தில் எவரொருவர் வசித்தாலும், துதித்தாலும் சிவ சாயுஜ்ஜிய மடைவார்கள் என்றுரைத்த சூதபுராணிகரை சௌனகாதியர்கள் பார்த்து, "எங்களருந்தவ குருவே! உப மன்யுவுக்கு முயல உருவான காரணத்தையுந் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று வினவினார்கள்.

மங்கணமாதவர் தவம்புரிச் சருக்கம் முற்றிற்று.



## 13. உபமன்யு தவம்புரிந்து முயல்வடிவடைந்து மோக்ஷமடைந்த சருக்கம்

தவமதிற் சிறந்தோ னாய தாக்குகான் முனிவ னீன்ற
பவமதிற் படியா சீலன் பண்புறை யுபமன் னென்பான்
சிவமதிற் செரியு மன்னைத் திகழுறத் தவஞ்செய் காலை
யவமதிற் படிந்தா னாக வன்னைமேற் கழல்க டாக்க. (1)

கண்டன னன்னை யுள்ளங் கடுஞ்சின முற்று னன்றே
விண்டனள் சசியா கென்று வியன்றவ முனிவ னங்கே
கொண்டனன் னன்னை சோலங் குலவுதாள் முடிக டோய
எண்டக விறைஞ்சு வானை யிழிவுரு வகலச் சொல்வாள். (2)

சௌனகாதியர்களே! நீங்கள் கேட்ட உப மன்யு விருத்தாந்தத்தை எனதாசிரியரியம் பியவற்றைச் சொல்லுகிறேன் கேளுங்கள் என்று கூறி, "சிற்றம்பலத்தில் திருநடனஞ் செய்யும் தற்பர னான ஆனந்தத்தாண்டவ மூர்த்தியை என்றும் மறவாத *தாக்குக்கால்முனிவர் தாமியற்றிய தவப்பயனால் தோன்றிய வரும், பசிக்குப்பாற்கடல் பரமனளிக்க வளர்ந்தவரும், பத்தி யிற்சிறந்தவருமான உபமன்யு முனிவரென்பவர் ஒரு காலத் தில் உலகம் பயந்த உமாதேவியைக் குறித்து உறுதியான தவமியற்றிவரும்போது ஒருநாள் உபமன்யு தம்மையறி யாது எம்பெருமாட்டி எழுந்தருளிய பீடத்தில் கால் படும் படியாக செய்யவே, அம்மையார் அதுகண்டு உபமன்யுவை உண்மையிற் செம்மைப் படுத்தவேண்டி, உபமன்யுவைப்

* தாக்கு—புலி. "புலிக்கான்" முனிவரென்ப.

பார்த்து, “நீ முயல்வடிவாகக்கடவாய்” எனச் சாபங் கொடுக்க, சாபமேற்ற உபமன்யு தான் தெரியாதிழைத்த குற்றத்திற்கு மிகப் பயந்து, அம்மையைப் பணிந்து, “அன்னையே! தாங்கள் கொடுத்த சாபம் அகலவேண்டுமென்று பிரார்த்தித்தார். அங்ஙனம், அம்பிகையும் உபமன்யுவைப் பார்த்து, அன்பனே! உன் சாபமகல எம்பெருமானினிது விளங்கும் புண்ணிய க்ஷேத்திரமாகிய பாதிரிவனமடைந்து வாழக்கடவாய்! நாம் அருந்தவஞ்செய்த அவ்வனத்தில் எம்பெருமானே உருக்கொண்டு விளங்கும் திருப்பாதிரி விருக்ஷத்தின் கிளை யுன்மேல் படும்போது நாமீண்டு யீந்த சாபம் நீங்கிப் பழைய வுருவடைவாய்” என்று கருணைமொழி கழன்றனள் கைலைவளர்ச் செல்வி.

அங்ஙனம் அம்பிகை யுரைத்தது கேட்ட “முயல்” வடிவேற்ற உபமன்யு பாதிரிவனம் புக்கி, பல நீர்த்தொகுதி குடைந்து, பாடலீசுரனைப் பணிந்து பூசையாற்றிவரும்போது ஒருதினம் ஆதிராஜன் என்னும் வேந்தன் ஒருவன் தன் சேனைகள் புடைசூழ காடடைந்து வேட்டையாடும்போது தாட்டிகமிருந்த முயலைக்கண்டு மன்னன் துரத்த, முயல் மன்னவன் தன்னை இம்சைப்படுத்துவானென்றெண்ணி பாதிரி விருக்ஷத்தின்கீழ் ஓடவே, முன்னாள் உமாதேவி யுரைத்தவாறு அப்பாதிரி விருக்ஷத்தின் கிளை முயல்மேல் பட்டமாத்திரத்தில், உடனே முயல்வடிவகன்று உண்மையில் உபமன்யுவாகி நின்றான்.

அவ்வதியற்புதங் கண்ட ஆதிராஜன் ஆச்சரியமும் பயமுமடைந்து, அவ்வனத்தி லருந்தவம் புரியும் இருடிச் [illegible]ட்டர்கள் திருவடிகளில் வீழ்ந்து, நடந்தவற்றை யாதி



யோடந்தமாகச் சொல்லிக் கொண்டு வருஞ் சமயம் அருந்தமிழாசிரியரான பெருந்தவ அகத்தியர் ஆங்குறவே, அங்குள்ளாரனைவரும் அவரடி பணிந்து ஆதிராஜனால் நடந்தவற்றை நவின்றனர். அகத்தியர் அன்புகொண்டு புலிக்கான் முனிவர் குமாரரான வுபமன்யுக்கு ‘முயல்’ வுருவம் வந்ததையும், அது நீங்கவே இவ்விதம் நிகழ்ந்ததென்றும் யாவருமறிய வியம்பினார்.

அதன் பின்னர் ஆதிராஜன் பாடலநாதனுக்குத் திவ்விய தேஜோமயமானத் திருக்கோயிற் கட்டுவித்தும், அவ்வாலயத்திற்கு வேண்டிய எல்லாவகைப் பொருட்களையும், ஏராளமான பூமிகளையுமளித்து, முறையே ஆலயத்தில் உள்ள சகல பரிவார தெய்வங்கட்கும், ஸ்ரீ பாடலநாதனுக்கும், ஸ்ரீ பிரகந்நாயகிக்கும் ஆறுகால பூசை நைவேத்தியம் நடைபெறுமாறும், அதற்கு அர்ச்சகர் முதலானவர்களையும் திட்டப்படுத்தி, அநேக பாடசாலைகளையும், மடாலயங்களையும் கட்டுவித்து, நித்தியோற்சவம், பிரதோஷாதிய மாதோற்சவம், பிரமோற்சவம் முதலிய விசேடங்கள் நடைபெறும்படியான ஏற்பாடு செய்து மகா பத்திமானென்று எட்டு திக்கும் மட்டிலா புகழுற்று இனிது வாழ்ந்துவந்தான் என்று கூறியதைக் கேட்ட சௌனகாதிகள் சூதரடி வணங்கி, எங்கள் கற்றவ குருவே! தாங்கள் இதுவரையில் பாதிரிவனத்தின் பெருமை யனைத்தும் கூறக்கேட்ட நாங்கள் சென்மசாபல்ய மானோம். ஆனால், அருந்தவ நாயகியாரை அகிலலோக காரணன் அரிய திருமணம் புரிந்த திருப்புகழைக் கேட்டானந்திக்க விரும்புகின்றோமாகலால், அவர்

றையும் அடியேங்கள் மீது அருள் சுரந்துச் சொல்லியருளல் வேண்டுமென் றடிபணிந்தார்கள்.

## உபமன்யு தவம்புரிந்து முயல்வடி வடைந்து மோக்ஷமடைந்தச் சருக்கம் முற்றிற்று.

---

## 14. திருமணச் சருக்கம்

---

அன்னைடைக் கயிலை நாத னருமணஞ் செய்வா னோர்த்துத்
தன்னரு காட்டி னோருஞ் சாற்றுமற் றுலகி னோரும்
பன்னரும் பெருமை வாய்ந்தப் பைந்தொடி மகளி ரோடும்
முன்னவன் பணித்த வாறே முதுநகர் புலிசை வந்தார். 1.

வந்தமுன் றுலகி னோரும் மணவினைக் கோலங் கண்டே
சிந்தைமகி ழுற்றார் மேன்மைச் சிவன்றிரு விளையாட் டுணர்ந்துப்
பந்தமுற் றோங்கும் பாதிரிப் பதிந்தகம் பானுமை நன்றே
சந்தத நிலவு மாங்கேச் சார்வை ரெவரு முய்வார். 2.

சூதமா முனிவர் சௌனகாதியர்களைப் பார்த்து, அருந்தவஞ்செய்யும் பெருந் தவ முனிவர்காள்! தேன் பொழியுப் பாதிரி வனமென்னும் திருப்பாதிரிப்புலியூரிற் றிருக்கோயில் கொண்டெழுந்தருளிய மங்கையோர் பாகன், முன்னர் தன் உமாதேவிக்கு உரைத்த உறுதிமொழியை நிறைவேற்றுவான் வேண்டி பிரமாதி தேவர்களும், மாதவச் சிரேட்டர்களும், சைவசமயாசாரியர்களும், மற்று முண்டானவர்



களும் கண்டானந்தங் கொள்ளும்படி, முன்னொருகால் அருந் தமிழாசிரியராம் அகத்தியருக்குக் காட்சி தந்ததைப் போல் மூவுலகத்துள்ளா ரெல்லாம் தன்னைப் புடை சூழ்ந்து வரப் பாதிரி வனம் வந்து, தேவதச்சனும் விசுவகர்மாவைக் கொண்டு கலியாண மண்டபம் ஒன்று கட்டும்படி யாக்ஞாபித்தனர்.

அகில காரணன் கட்டளையின்படி நீலமா மணியால் வேதிகையாக்கி, மரகதத்தாற் படிகளும், அவ்வேதிகைமேற் பளிங்கினாற் சுவர்களமைத்தும், நான்கு புறத்திலும் வாயற் படிகள் வைத்தும், இன்னும் நவரத்தின முதலாயவைகளினால் கலியாண கூடங்களமைத்து, அம்மண்டபத்திற்கு முன் முகமெல்லாம் முத்தாரங்கள் தொங்கவிட்டலங்கரித்தும், பொன்மயமான கதலி, கமுகு நாட்டி, மாவிலை தோரணங்கள், குருத் தோலைத் தோரணங்கள் கட்டி வெகு அழகாக் கலியாண மண்டபத்தைச் சிங்காரித்து, வந்தவர் தங்கும்படியான சகல வசதிகளுடன் பல மாடமாளிகைகளும் தயாரிக்கப்பெற்றன.

அதன் பின்னா எல்லாம் வல்ல எம்பெருமானுக்கும், எம்பெருமாட்டிக்கும் மங்கள ஸ்நானஞ்செய்வித்துப் பின்னர் இலட்சுமிதேவி முதலான மற்றைய தேவஸ்திரீகள் எம்பெருமாட்டிக்குப் புத்தாடை யுடுத்தி, நந்தச் சீப்பினால் குழலைவாரி, சடைபின்னி, சடைக்குகந்த பல ஆபரணங்கள் சூட்டி, நெற்றியிற் றிலதந்தீட்டி, கண்ணுக்கு மையிட்டு, மார்பின்மீது சரிந்து விழுகின்ற நதியைப்போல வெண் முத்தாரங்களைப் புனைந்து, வளையல், கடகம் முதலியவைகளை முன்கையிலேப் பூட்டி, ஒவ்வொரு விரலுக்கும் பொன்மோதிரங்கள்

கோர்த்து, ஒட்டியாணம், மேகலாபரணம் முதலியவை யிடுப்பிற்கட்டி, பாதசரங்கள் பலவும் தரித்து, தேவியைத் திருமணத்திற்கேற்பத் திவ்வியாலங்காரஞ் செய்தார்கள்.

எம்பெருமானுக்கும் மணக்கோலத்திற்கேற்ற திவ்வியாபரண வலங்காரப் படுத்திக் கலியாண மண்டபம் கொண்டு வந்துட்கார வைத்தார்கள். அப்போது திருமண மண்டபத்தில் தேவர்கள் யாவரும் வந்து நிறைந்திருந்தார்கள். முரசு, தண்ணுமை, தடாரி, மொந்தை முதலிய நரம்பு, தோல், தொளை முதலியவைகளால் செய்யப்பட்ட பற்பல வாத்தியங்களும் கடலொலிபோல் சப்திக்காநிற்க, ஆகம விதிப்படி நான்முகனால் அக்கினிவளர்த்தி, திருமாலால் தேவியின் திருக்கரத்தைப் பிடித்துக் கண்ணுதற் கடவுளுக்குக் கன்னிகாதானமாகத்தர ஸ்ரீ பாடலநாதனுக்கும் ஸ்ரீ பாடல நாயகிக்கும் பாணிகிரகணஞ் செய்யத் தேவர்கள் பூமழை பொழிய, வேதியர் வேதமுறைக்கத் திருக்கலியாணக் காட்சியை எவர்களு மறியச் செய்து, நல்லாசிகூறி யித்தலத்திலே என்று மிருந்து வணங்கினோரவர்களுக்கும் நல மளிப்போமென்றுச் சாற்றியருளினார்கள் எம்பெருமானாகிய பாடலீஸ்வரனும், எம்பெருமாட்டியாகிய பிரகந்நாயகியும் எனச்சூதர் சௌனகாதியர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளிய சூதமா முனிவருக்குச் சௌனகாதியர்கள் சகல வுபசாரங்களைச் செய்து திவ்விய வாடையாபரணங்களா லலங்கரித்து பாதகமலங்களில் நாண்மலர் தூவித் துணையடிபரவி சேவித்து மங்களாசீர்வாத மேற்று ஆனந்த சாகரத்தி லாழ்த்தி ஸ்ரீ பாடலநாதன் பாதகமலங்களை யனுதினமும் பத்திசிரத்தை யுடன் போற்றிப் புகழ்ந்து வாரா நின்றார்கள்.

திருமணச் சருக்கம் முற்றிற்று.

# முடிவுரை

அலைகடலை யாடையாகக்கொண்ட மண்ணுலகத்தில் மக்கள் வழிபட்டுய்வான் வேண்டி, சர்ப்பாபரணரும், செஞ்சடையிற் கங்கையைத்தரித்த சங்கரனென்னும் மகத்தான பெயரை வாய்ந்தவருமான சிவபெருமான் விரும்பி மிளிரும் திருப்பாதிரிப்புலியூர் மான்மியத்தை எழுதுவோரும், எழுதுவோர்க் குதவி புரிவோரும், அச்சிலேற்றுவோரும், அச்சிட்டுப் பலருக்கு முபயோகமாகும்படி விற்பனை செய்வோரும், பெருமை மிகுந்த இம்மான்மியத்தை வாங்கிப் படிப்போரும், படிக்கக் கேட்போரும், மனங்கனிதரப் பத்தி சிரத்தையோடுப் பகருவோரும், பகருவோர்க்குதவி புரிவோரும், இறைவனது பெருமையைப் பெரிதும் போற்றியுரைக்கு மிந்நூலைப் பெறுவோரும் இப்பிறப்பில் மனைவி, மைந்தர், பந்து, மித்திரர் முதலியோருடன் சங்கநிதி, பதுமநிதி யென்னு மிரண்டு நிதிகளுங்குலவிட இன்புற்றிருந்து, பின்னர் தேவநாடுற்றுத் தோன்றாத் துணைவன்றிருப் பதமடைவார்களென்பது உண்மை, யுண்மையே!

சுபம்! சுபம்!! சுபம்!!!

## வாழி விருத்தம்

வாழிநான் மறைகள் வாழி வயங்குறு சைவம் வாழி
வாழிமா நிலத்தோர் வாழி மன்னுசீர் புலவர் வாழி
வாழிநா வீக்க நூலும் வகைமுறப் பதித்தோன் வாழி
வாழியே படித்துங் கேட்க வாய்ந்தவர் வாழி வாழி.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்தலமான்மியம்
சம்பூர்ணம்

86

இந்நூலாசிரியர் பணிந்தாற்றிய

## ஸ்ரீ பாடலீசுரர் துதி.

நீரிய மேன்மை நிகழ்திருப் பாடலம்
    நிழலுற வமர்ந்த நிமலனைத் தொழுதகை
நேரிய முறையி லொன்றியென் னங்கம்
    நிலமுறப் பணிந்து நிகழ்த்திடு மெற்குச்
சீரிய கலைகட் செறிந்தநற் புலமைத்
    திகழ்மணி யென்றுல கறைந்திடு மாறும்
வாரிய வுலகில் வழுவறும் வாழ்வும்
    வகையுற மாறேத் தருகவென் கோவே.

1137

## ஸ்ரீ பிரகந்நாயகி துதி.

பூமணக்குந் தடஞ்சோலை சூழுமுயர் பாதிரிநற்
    புலியூ ரோங்கித்
தேமணக்கு மென்னன்னாய் நின்கருணை பதியவெனத்
    தேடித் தேடி
நாமணக்குஞ் சீர்தமிழின் பாமாலை நயந்தளித்தே
    னலமே வேண்டிப்
பாமணக்குஞ் சிந்தைமிக விழைவுற்று நின் பதமே
    பாவிப் பாயே.

ஆவணக்காப்பகம்
17085
சென்னை 600 008.